தமிழ்க் கீர்த்தனைகள்

பொதுப் பதிப்பாசிரியர்

அ. அப்துல்மஜீத்

இயக்குநர்

தொல்லியல் துறை, சென்னை – 113

பதிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்

காப்பாட்சியர்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

சென்னை - 5

©

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

2001

தமிழ்க் கீர்த்தனைகள்

அ. கீ. சு. நூலக வெளியீடு எண் : 450
தமிழ் நூல் வெளியீடு எண் : 125

தமிழ்க் கீர்த்தனைகள்

பொதுப் பதிப்பாசிரியர்
அ. அப்துல்மஜீத்
இயக்குநர்
தொல்லியல் துறை, சென்னை - 113

பதிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 5

முதற் பதிப்பு 2001

பிரதிகள் 500

தமிழ்க் கீர்த்தனைகள்

பொதுப் பதிப்பாசிரியர் :

திரு. அ. அப்துல் மஜீத்
இயக்குநர்
தொல்லியல் துறை

பதிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு :

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

வெளியீடு :

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-600005

விலை : ரூ.

அச்சிட்டோர் :

தொல்லியல் துறை
தரமணி, சென்னை-600113

G.O.M.L. Publication No. 450
Tamil Publication No. 125

TAMIL KIRTTANAS

General Editor
A. ABDUL MAJEED
Director
Department of Archaeology, Chennai - 600 113

Edited and Translated by
Dr. S. SOUNDARAPANDIAN
Curator
Government Oriental Manuscripts Library
Chennai - 600 005

First Edition 2001
No. of Copies : 500

TAMIL KIRTTANAS

General Editor :

THIRU. A. ABDUL MAJEED
Director
Department of Archaeology

Edited and Translated by :

DR. S. SOUNDARAPANDIAN
Curator
Government Oriental Manuscripts Library

Price : Rs.

Published by :

Government Oriental Manuscripts Library
Chennai - 600 005

Printed at :

Department of Archaeology
Tharamani, Chennai - 600 113

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை 600 009
நாள் : 17—3—2001
தி.பி.2032/பங்குனி 4

அணிந்துரை

தமிழகத்தில் பல நூற்றாண்டுகளாக எழுதுபொருளாக விளங்கிய ஓலைச்சுவடிகள் இன்றைய காகித உலகில் பயன்பாடு குன்றி ஒதுங்கிவிட்டன ஓலைச்சுவடிகள் தமிழகக் கலை, அறிவியல், பண்பாடு மற்றும் வரலாற்றுச் சுரங்கங்களாகும். இவை எளிதில் உடைந்தும், சிதைந்தும் அழிந்துவிடக் கூடியவை. இவற்றைச் சேகரித்துப் பாதுகாப்பது, ஆய்வு செய்வது என்பது தமிழனின் புகழ் மங்காது உலகெங்கும் பரவச் செய்யும் ஓர் அரும்பணியாகும். இதனை நன்கு உணர்ந்துள்ள மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு பல்வேறு அமைப்புகளையும் ஊக்குவித்து ஓலைச்சுவடிகளைச் சேகரித்து பாதுகாத்து, ஆய்வு செய்து வெளியிட உதவி வருகிறது.

அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகள் மொழி வல்லுநர்களால படிக்கப்பட்டு, படியெடுக்கப்பட்டு ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. அவ்வகையில் 'தமிழ்க் கீர்த்தனைகள்' என்ற இந்நூல் 450-ஆவது வெளியீடாக வெளிவருகின்றது.

முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழ் சங்ககாலம் தொட்டு, சிறப்புப்பெற்று விளங்குவதாகும். சங்ககாலப் பாணர்கள் அரசர்களைப் பாடியும், காவிய காலச் சிலம்பு சமுதாயத்தை முன்வைத்தும் பக்தி இலக்கியங்கள் சமயத்தை நோக்கியும் இசைத்தமிழை வளர்த்தன என்பது தமிழ் இசை வரலாறாகும். இடைக்காலத்தில் கோயில் தோறும் பதிகம்பாடுவார், தமிழ் பாடுவார் என இசைக் கலைஞர்கள் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு ஊதிய நல்கைகள் வழங்கப்பட்டதைக் கல்வெட்டுகள் காட்டு கின்றன. அருணகிரிநாதர் ஊர்தோறும் முருகனைப் பாடி இசைத்தமிழை வளர்த்தது அதன் பின்னர் இசைத்தமிழ் போற்றப்பட்டதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அண் மைக் காலத்தில் கதைப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், கூத்துப்பாடல்கள், காவடிச்சிந்து போன்றவை தமிழி சையை வளப்படுத்தியுள்ளன. தமிழிசையைப் போற்றும் வகையில் தமிழக அரசு இசைக்கல்லூரி அமைத்தும், இசைவல்லாரைப் பாராட்டியும் இசைத்தமிழை வளர்ப்பது இன்றைய வரலாறாகும்.

''தமிழ்க் கீர்த்தனைகள்'' என்னும் இந்நூல் தமிழ கத்தின் தென்பகுதியில் அமைந்த பெருங்குளம் மாயக் கூத்தனை மையமாகக் கொண்டு பாடப்பட்டதாகும். 44 கீர்த்தனைகளையுடைய இச்சுவடியின் பாடம், ஆங்கில எழுத்துப்பெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்புடன் இங்கு வெளியிடப்படுகிறது. கீர்த்தனைகளின் இராகம் தாளம் ஆகியவையும் சுட்டப்பட்டுள்ளன. கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளை என்பதை 'பால்கறக்கையில் இளம் கிடார் அவிழ்த்துவிட்டு கோரணி கொள்கிறான்', குடுகுடுத் துப்போய் அவனை மறிச்சபோது அவன் பொடு பொடுத்துத் துள்ளுறான்' என்று இசைபடச் சொல்லும் இக்கீர்த்தனைகள் முல்லை நிலப் பண்புகளை இனிய தமிழில் படம் பிடித்துக் காட்டுபவையாக உள்ளன.

தமிழிசைக்கு வளம் தரும் இந்நூலைப் பதிப்பித்து வெளியிடும் பதிப்பாசிரியர்கள் பெரிதும் பாராட்டுக்குரியவ ராவார். இசைக் கலைஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், தமிழ்சார் உலகிற்கும் இந்நூல் ஒரு நன்னூல் என்பதில் ஐயமில்லை.

அன்புடன்,

மு. தமிழ்க்குடிமகன்

பதிப்புரை

தென்குளந்தை மாயக்கூத்தன் மீது பாடப்பட்ட தமிழ்க் கீர்த்தனைகள் இவை.

ஆசிரியர் பெயர் ஆழ்வார் என்பதாகும்.

குளந்தை என்ற ஊர், பாண்டி நாட்டில், பொருநை ஆற்றின் வடகரையில் உள்ளது ; பொருநை - தாமிரபரணி.

தூத்துக்குடி மாவட்டத்தில், ஸ்ரீவைகுண்டத்திற்கு வடகிழக்கே, ஏறத்தாழ ஏழு கல் தொலைவில் குளந்தை என்ற இவ்வைணவத் தலம் உளது.

இக்குளந்தைத் தலத்து மாயக்கூத்தன் மீது பாடப்பட்ட தமிழ்க் கீர்த்தனைகள் கொண்ட ஓலைச்சுவடி (ஆர். 10791), சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் பாதுகாக்கப் பட்டு வருகின்றது.

இவ்வோலைச்சுவடி, அண்மையில் (1998) சென்னைப் பல்கலைக் கழக வடமொழித்துறையினரால் அ. கீ. சு. நூலகத்திற்கு அன்பளிப் பாக அளிக்கப்பட்ட ஏறத்தாழ 900 ஓலைச்சுவடிகளில் ஒன்று. இவ்வளவு ஓலைச்சுவடிகளை அன்பளிப்பாக ஒரே நேரத்தில் நூலகத்திற்கு அளித்த அத்துறையின் தலைவர் முனைவர் திருமதி ஈ. ஆர். இரமாபாய் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளத்தூர் என்ற ஊரும் தமிழில் குளந்தை எனப்படுகிறது. குளத்தூர் என்ற பெயரில் சில ஊர்கள் தமிழ்நாட்டில் உள. சென்னையின் ஒரு பகுதியாக ஒரு குளத்தூர் உளது; திருச்சிக்கும் மதுரைக்கும் இடையே ஒரு குளத்தூர் உளது; (இது ச. வேத நாயகம்பிள்ளை பிறந்த ஊர்). கொளத்தூர் என்ற பெயரிலும் ஓர் ஊர் உளது. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாடிய

குளத்தூர்க் கோவை என்ற நூலும் அச்சாகியுள்ளது. இது உ. வே. சா பதிப்பாக வெளிவந்தது. இதன் இரண்டாம் பதிப்பு *1926*-இல் அச்சானது.

நம் ஓலைச்சுவடி கூறும் குளந்தை, தென்குளந்தை, குளந்தாபுரி என்றெல்லாம் கீர்த்தனைகளில் குறிப்பிடப்படுகிறது.

இக்குளந்தை எனும் வைணவத் தலத்து மீது நம்மாழ்வார் பாடிய ஒரே ஒரு மங்களாசாசனப் பாடல் தவிர வேறு ஆழ்வார் பாடல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

நம்மாழ்வாரின் அப்பாடல் :-

கூடச்சென் றேன்இனி என்கொ டுக்கேன்?
　　கோல்வளை நெஞ்சத் தொடக்கம் எல்லாம்
பாடற்(று) ஒழிய இழந்து வைகல்
　　பல்வளை யார்முன் பரிச ழிந்தேன்!
மாடக் கொடிமதிள் தென்கு ளந்தை
　　வண்குட பால்நின்ற மாயக் கூத்தன்
ஆடல் பறவை உயர்த்த வெல்போர்
　　ஆழி வலவனை ஆதரித்தேன்!

(திருவாய்மொழி, 8:2:4)

இராக தாளங்கள், ஓலையிற் குறிக்கப்பட்டவாறே ஒவ்வொரு பாடலுக்கும் இங்கு தரப்பட்டுள்ளன.

தமிழ்நிலத்தோர் புல்லாங்குழல் (flute) என்ற வாத்தியம் மூலமாகவே ஏழு சுரங்களைத் தமிழ் மக்கள் முதன்முதலில் கண்டறிந்தனர் என்ப.

புல்லாங்குழலில் மொத்தம் எட்டுத் துளைகள் இருக்கும்; கீழ் முதலாவது துளையைக் கைவைத்து மூடித்திறவாமல், எப்போதும் அதில் காற்று வந்துகொண்டே இருக்கவேண்டும்! அந்த நிலையில்தான் மற்ற சுரங்களை துளைகள் உருவாக்கும்

எனலாம். கீழிருந்து, இரண்டாம் துளையையும், ஏழாம் துளையையும் விரலால் மூடிக்கொண்டு ஏனைய துளைகளில் காற்று வருமாறு செய்தால், அப்போது வரும் ஒலியே (சுரமே), **சட்சம்** எனப்படும் !

அதைப்போன்றே, கீழிருந்து இரண்டாம் துளையையும், மேலே உள்ள எட்டாம் துளையையும் மூடிக்கொண்டு, ஏனைய துளைகளில் காற்றை ஒலிக்கவிட்டால், அப்போது வரும் சுரம் ரிடபம் என்ப.

கீழ்த்துளையை விட்டு விட்டு, மீதி ஏழு துளைகளையும் அடைத்துக்கொண்டு ஊதினால், அப்போது வரும் சுரம், 'ம' என்பர் !

எல்லாத்துளைகளையும் திறந்தவாறு ஊதினால், அப்போது வரும் சுரமே, **காந்தாரம்** என்பர் !

இவ்வாறு, புல்லாங்குழல் மூலமாகத் தமிழர்கள் ஏழு சுரங்களைக் (சப்த சுரங்களை) கண்டறிந்து உலகுக்கு அளித்தனர் !

பொதுவாகப் பாடலில் உள்ள பொருள், சொல்லிசை, இராகம் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று பொருந்துவதாக இருந்தால்தான் பாட்டு இனிக்கும் !

இந்த அடிப்படையில்தான் **தேவாரப் பண்கள்** இயங்குகின்றன !

இதே அடிப்படையில்தான் திருவாசகப்பாக்களும் **மோகன** இராகத்தில் அமைகின்றன ! ஆம், திருவாசகப்பாக்கள் யாவுமே மோகன இராகத்தில் பரம்பரையாகப் பாடப்படுவனவே !

குளந்தாபுரி மாயக்கூத்தன்மீது பாடப்பட்ட இந்நூலில் உள்ள தமிழ்க்கீர்த்தனைகள் கொண்ட ஓலைச்சுவடியில், நூலுக்கான தலைப்பு எதுவும் காணப்படவில்லை. ஓலைச் சுவடியின் தொடக்க ஏடுகளே கட்டில் இல்லை. எனவே, சுவடி வைத்திருந்தோர் 'சங்கீதக் கீர்த்தனங்கள்' என்று கட்டின்மீது குறித்திருந்ததால்,

நூலகத்தில் இன்றும் இக்கட்டு, சங்கீதக் கீர்த்தனங்கள் என்ற தலைப்பிலேயே பாதுகாக்கப்படுகிறது. **தமிழ்க் கீர்த்தனைகள்** என்ற தலைப்பு, பதிப்பாசிரியர் இட்டதே! தமிழில் கீர்த்தனைகளே இல்லை என்பதுபோல அல்லவா தெலுங்குக் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டுள்ளனர்!

தென்குளந்தை அல்லது **குளந்தை** எனப்படும் இவ்வூர் இப்போது, **பெருங்குளம்** என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

பெருங்குளம் நவதிருப்பதிகளில் ஒன்று.

இப்பெருங்குளம் குறித்த வரலாறுகள் ஏற்கனவே சில நூற்களில் வெளியாகியுள; பி. ஜே. தங்கசாமி எழுதிய கீழ்வரும் நூற்களைக் குறிக்கலாம் :-

1. Cholas of South India
2. கலியாண வாழ்த்துப் பாடல்
3. குமாரசுவாமிநாடன் கதை
4. நட்டாத்தியர் வரலாறு (1984)

முனைவர் **ஆ. தசரதன்** எழுதிய **அழிப்பாங்கதைப்பாடல்கள்** என்ற நூலில், இப்பெருங்குளம் குறித்த சில பாக்கள் தரப்பட்டுள்ளன.

பெருங்குளம் மாயக்கூத்தன் மீது பாடப்பட்ட நமது இந்நூற் கீர்த்தனைகள் இதுவரை அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை; எனவே இங்கு பதிப்பிக்கப்படுகின்றன.

இவ்வோலைக்கட்டில், கீர்த்தனைப்பாக்கள் நிரலாகத் தரப்படவில்லை.

முதற்கண் சில கீர்த்தனைகள் இராக தாளப் பெயர்களுடன் உள்ளன; பின்பு, சில தனிப்பாக்கள் மாயக்கூத்தன் மீது வருகின்றன; பின்பு சுலோகம் ஒன்று எழுதப்பட்டுளது. அவற்றின் பின்பு பதம், கீர்த்தனைகள் வருகின்றன. இறுதியில் திவாகர நிகண்டு நூலின் சில ஏடுகள் உள்ளன.

இப்படிப்பட்ட கலவைச் சுவடியிலிருந்து இயன்ற அளவிற்குக் கீர்த்தனைகள் இங்கு நிரலாக அளிக்கப்படுகின்றன.

கீர்த்தனைகளுக்குத் தலைப்புகள் இட்டவர் பதிப்பாசிரியர் ஆவார்.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று பகுத்துத் தலைப்புகள் இட்டவரும் பதிப்பாசிரியரே; ஓலையில் இவை இல்லை. ஓலையைப் படித்தால், அதில் பல்லவி எங்கே இருக்கிறது, சரணம் எது, அனுபல்லவி எது என்று இசைவாணர்களுக்குக்கூட எட்டாது !

இந்நூலின் முதல் கீர்த்தனையில், **சோரநாபூர்** என்று பெருங்குளத்திற்கு இன்னொரு பெயர் தரப்பட்டுள்ளமை அறியத் தக்கது.

இக்கீர்த்தனைகளின் ஆசிரியர் பெயர் **ஆழ்வார்** என முன்பே குறிக்கப்பட்டது. கீர்த்தனைகளில் **ஆழ்வார் சரஸ்வதி** என்று வருகிறது. சரஸ்வதி என்றால் வாக்கு என்று கொள்ளவேண்டும்; **ஜெயதேவர் சரஸ்வதி** என்று வரல் காணலாம். இங்கு புலவர் (வாக்கேயக்காரர்) பெயர், ஜெயதேவர் என்பதே. இதே நெறியில்தான் **ஆழ்வார்** என்ற பெயரும் கோடப்பட்டது.

இப்புலவரின் **சொந்தக் கையெழுத்தில்** எழுதப்பட்ட சில ஓலைகள் இச்சுவடிக்கட்டில் இருப்பதாகக் கொள்ள இடமுளது.

இப்புலவரே, சீர்களை இசைக்கு ஏற்ப ஆங்காங்கே அடித்துத் திருத்தியுள்ளார்.

ஓரிடத்தில், 'தோமுனாழி' என்று எழுதிவிட்டார்; அது இசைக்கு ஒத்துவரவில்லை எனப் பார்த்ததும், 'தேவனாழி' என்று திருத்தியுள்ளார்.

இவ்வாறு இவர் அடித்தும், வரிபிளந்தும் எழுதியுள்ளதிலிருந்து, கீர்த்தனைகளின் முழு உருவத்தைக் கண்டறிந்து அச்சிட்டு வெளியிடுவது கடும்பணியாகிவிட்டது! பதிப்பில் சில கீர்த்தனைகளில், சில வரிகள் குறைவு என்பது போலவும் காணப் படுகிறது. சுவடியின் மேற்குறிப்பிட்ட தன்மையே இதற்குக் காரணம்.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற சொற்களுக்கு Chorous, Antichorous, Cogent என்ற மொழிபெயர்ப்பு முற்றும் பொருந்தக் கூடியது என்று கூற இயலாது. இருப்பினும், ஒருவாற்றான் கருத்தை அடிப்படையாகவும், ஆங்கில மரபைத் தழுவியும் அவ்விதம், ஒரு மெல்லிய முயற்சியாகவே மொழிபெயர்க்கப் பட்டுள.

தங்கள்

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,
மு.க. (தமிழ்), மு.க. (ஆங்), இ.கல், பட்.வ.மொ., த.நி.
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை – 600 005.

EDITOR'S INTRODUCTION

These are the Tamil musical songs called Kīrttanās on Tenkuḻantai Māyakkuttan.

Author's name is Āḻvār.

The place *Kulantai* is on the northern bank of *Porunai* in the Pandia country ; Porunai - Tāmirabaraṇi.

In the district Tuticorin, northeast of Srivaikuntam, nearly in seven miles is situated this Vaishnava shrine Kuḷantai.

A *palm leaf* manuscript (R. 10791) is being preserved at G.O M.L., Chennai-5 which contains Tamil Kīrttanās sung on Māyakkuṭṭan of this shrine.

This palm leaf manuscript is one among the nearly 900 palmleaves donated by the Sanskrit department of the University of Madras. I, at this moment, express my sincere gratitude to Dr. (Mrs.) *E. R. Ramabai* for her magnanimous donation executed in one go:

The town Kuḷattur is also called as Kuḷantai in Tamil. There are few places under the name Kulattur. A place in Chennai possesses this name Kuḷattur. There is another Kulathur between Tiruchy and Madura. (Ca. Veda nayagam Pillai's birth place). There is another place with the name Koḷattūr. Tiricira-puram Mīnakshisundaram pillai's *Kulatturkkovai* is available in print. This was edited by Dr. U. V. Swaminatha Iyer. Second edition of this book came in 1926.

Kulantai, which our leaf mentions, has been termed as Tenkuḷantai, Kuḷantāpuri etc.

Nammāḻvār had sung a eulogy on this Vaishnava shrine Kuḷantai which is only one rendered by any Āḻwār.

Nammāḻwār's piece :-

I con't bear this torture !
Caused because of His departure !
Which made my elan lose !
Tenkuḷantai, fortified by well
Flying over it a flag tall !
Westernside dwells Māyakkuttan
With dancing kite and victorious wheel !

(Tiruvaimoḻi 8:2:4)

Tune and rhythm given in this book are as they have been incised on leaf.

It has been said that the Tamils had discovered the seven basic notes from the instrument flute for the *first time.*

In flute, there are eight holes ; Bottom most first hole, always, should not be closed and should be allowed for the free release of air through it ! Only in that structure, the other seven holes will create all the notes.

Second hole from bottom and the seventh hole should be closed and the air should be puffed up though the remaining holes to render '*Catjam*' !

Likewise, if we sound through the other holes closing the second and the eighth hole, what we get is called the note *ritapam*, it is said,

Except the first hole, if all the remaining seven holes are closed while puffing up air from mouth, the resulting note is called 'ma'

While puffing up air through all the holes in opening position, we get what is called as 'Kāntāram'!

In this way, ancient Tamils discovered the seven key notes (saptaswaras) and presented to the whole world!

Generally, the content of the musical song, tune, word strength should have cohesion to send a sweet melody!

Only on this basis the *tevara* songs flourish!

On this very same principle run the songs of *Tiruvacakam*. Yes, all the Tiruvacaka songs have been traditionally sung in the tune called Mohanam!

Title for this book has not been incised in the bundle of leaves; The beginning folios are not available. So, the collector had put the title as 'Cankītak kīrttanaikaḷ' and the G.O.M.L. is also preserving this bundle only under this title. The title *Tamilkkirtanaikal* has been assigned by the editor! Are people not singing only Telugu kīrttanais projecting a false notion that there is no kīrttanai in Tamil at all?

The place Tenkuḷantai or Kulantai is now known as Perunkuḷam.

Perunkuḷam is one among the nine shrines (nava tiruppatikaḷ)

Chronicles on this Perunkuḷam has been dealt with in some books already; P. J Tankacamy's following books may be noted :-

1. Cholās of South India
2. Kaliyāna vāḻttuppāṭal
3. Kumāracuvāmi nāṭan katai
4. Nattattiyar varalāru (1984)

Dr. Thasarathan's research work Aḻippānkataippāṭalkaḷ gives us some stanzas on this Perunkuḷam

These kīrttanās on Perunkuḷam Māyakkūttan it seems have not been published so far; hence have been taken up for publication.

In this leaf bundle, the kīrttānās have not been rendered in order.

At the beginning, some kīrttanās are available with the names tune and rhythm ; After that, a few stray stanzas on Māyakkūttan are present ; Then, a sloka is written following there, a few 'patam' and kīrttanās come. Lastly, a few leaves of Tivākaram are available.

So, from this bundle, kīrttanas have been published, in order, as far as possible in this volume.

Suitable content headings for kīrttanās have been given by only the editor.

Pallavi, Anupallavi, Caraṇam etc., divisions have been made by the editor ; In palmḻeaf there is no such bifurcations. If palmleaf is read as it is, even an expert singer of Carnatic music cannot understand where is what division !

In the first kīrttanai of this book, another name mentioned for Perunkuḷam as *Coranapur* is noteworthy.

As noted earlier, author of these musical pieces is one Āḻvār. Actually in songs, his name is incised as *Alvar Saraswati*. Saraswati means utterance. We can compare here the name *Jeyadevar Saraswathi*. Here, his name is only Jayadevar. So, on this basis only we have inferred, as above the poet's name as *Alvar*.

We can assume that a few manuscript folios had been written in the author's own hand.

This author himself, to suit the music, had changed several words here and there by tampering.

In a place, he had incised first as 'tōḻanāḻi'; but on realising its unsuitability to music, he had changed it to 'tēvanāḻi'.

It was a tough job for this editor to pull out a clear form of kīrtanas from his tamperings and additions in leaf This is the reason why, it appears, a few feet are missing in our kīrtanās, printed here.

Though literary grandeur is scanty, this engendars innumreable further researches.

For example, to read the *Mind Variations of Tamils* this book may be used as a source material

Before independence
We witnessed Iron Hearted Men.
After independence
We witness Iron Chest Men !

was the Modern Poetry written by the editor of this piece. In these lines mind variation is blatant. To do research in the line of such a tenor, our present may be useful.

About Cōranāpur, mention was made before. Here, let us write more. The main deity of Perunkuḷam is Cōranātapperumāḷ. It is said that a sketch is available in Sri Brahmāṇṭapurāṇam on this Perumāḷ. According to tradition, one Kumutavaḷḷi was kidnapped by one 'asura' and later this Cōranātapperumāḷ redeemed her. Mr. Venkaṭa varatan helped in collecting this information.

This repertoire can well be compared the *Nantanar Carittirak Kirttanai*. In our palmleaf itself, it has been written as, "similar to the Nantan chronicle".

Few kīrttanās in our palmleaf are quite similar to those of Nantanār kīrttanās.

Kopālakrishṇa Bhāratiyār (18th Century A.D.), is the author of Nantanār Carittirak Kīrttanai.

Kōpālakrishna Bhāratiyār was born at *Narimanam* a village near Nāgapaṭṭinam, in a Saiva Brahmin family. He was so fascinated towards Natarājā of Chitambaram;

So, just like him, following his foot prints, our author *Alvar Saraswathy* also began to compose musical songs on Perunkulam Perumāḷ!

So, it goes without saying that our musical songs, had been composed posterior to Nantanār carittirak Kīrttanai. That is, *later part of 18th century or early 19th Century* can be assigned.

Lastly, about our translation!

This present endeavour is consummated only with a view to spread the Tamils' capabilities to the whole of India, whole of world!

Here, original idea has not been, it can be observed, brought into English; only the central theme of Tamil has been rendered in English.

For the Tamil words Pallavi, Anupallavi, and Caraṇam, English translation Chorus, Antichorus, Cogent are not quite equal; However, as a teetering attempt, such a translation has been carried out.

yours

Dr. S. Soundarapandian
M.A.(Tamil), M.A.(Eng.), B.Ed., Dip.Skt., Ph.D.
Curator
Govt. Oriental Manuscripts Library

தமிழ்க் கீர்த்தனைகள்

(குளந்தை மாயக்கூத்தன்
மீது
கீர்த்தனைகள்)

1

சோரநாபூர்ச் சேவை!

இராகம் : கலியாணி　　　　தாளம் : ஆதிதாளம்

(பல்லவி)

ஸ்ரீசோரநாபூர்த் திவ்விய மங்களச்
சேவை தரிசிக்கத் திகட்டாதையா!

(அனுபல்லவி)

ஹரிஹரி முகுந்தன்முன்
அபாயச் சயனம் செய்தோன்
அலர்மேலு மங்கை நாதனாகக்
குளந்தையில் வந்த
(ஸ்ரீ)

(சரணம்)

1. வாலிகா வனத்தில் தவஞ்செய்யும் மாதுதனை
வண்மையுடன் அருளுஞ் செய்து மலர்க்கையினை
மாலுடனே பிடித்து மணஞ்செய் துந்தான்
அனைவர்க்கும் காட்சிகொடுக்கு மாயவனாம் இந்த
(ஸ்ரீ)

2. வாசற் றடம்பொய்யில் மாமறையோன் தேவி
மகிழ்ச்சியுடனே வாடல்புரிவதாகக் காய மேவி
நேசமுடன் இருக்கஅசுரன் எடுத்துத் தாவி
நேராயோ டவனை வென்ற சிங்கார
(ஸ்ரீ)

3. அமரர்களுந் துதிக்கவந்த நாமறை சொல்ல
அவனிதனில் உள்ளோர்கள் அன்பாய்ப் புகழவல்ல
நிமலனாகிய மாயக்கூத்தன் பதத்தில் நல்ல
நீதியாகக் கவிவாணர் பாடிச் செல்ல

(ஸ்ரீ)

[நாதன் - கணவன்
மால் - மயக்கம்
மகிழ்ச்சியுடனேவாடல் = மகிழ்ச்சியுடனே + ஆடல்
அவனி - உலகம்
பதம் - பாதம்]

TAMIḺ KĪRTTAṆĀS

KĪRTTAṆĀS ON KUḶANTAI MĀYAKKŪTTAṈ

1

Sight at Coranapur

Tune : Kaliyāṇi *Rhythm* : Āti

(Chorus)

The sight venerable, full of joy
Of Coranapur will never cloy!

(Anti Chorus)

Hari Hari Mukundaṇ
Slept with risk in yore !

Counterpart of Alarmelumankai
He at Kulantai dwelt !
(The sight)

(Cogent)

1. The lady at Vālikavanam did penace !
On her showered grace the Lord
Married her giving joy to all
Manifested this wondrous before all !
(The sight)

2. The consort of lord replet with Vedas
While playing in tank smelling fragrance !
Kidnapped by an asura to enjoy !
It was the lord who redeemed her killing the asura !
(The sight)

3. The gods flock and Vedas sung
All the people extol the 'king'
Sages sing the glory one and all
At the feet of this 'wonderful' !
(The sight)

[nātan - husband
māl - bewildering
makil̲cciyuṭanē vāṭal = makil̲cciyuṭanē + āṭal
avaṇī - world
patam - feet]

(The place Cōranāpūr may also be deciphered as Corṇāpūr.)

2

ஏன் வாது செய்கிறீர்?

இராகம் : பூபாளம்

(பல்லவி)

ஏதோ என்மீதினில்
வாதுசெய் திருக்கிறீர்
இன்னதென்(று) அறிகிலேனே!

(அனுபல்லவி)

சூது செய்யலாமோ? குளந்தை மாயக்கூத்தா!
துயரந்தனைத் தவிர்த்துச்
சுந்தரமாய்க் காவாமல்
(ஏதோ)

(சரணம்)

1. அண்டியண்டி உந்தன் அடியிணைப் போற்ற
அபதாரச்சமை செய்யாமலே
கண்டும் காணாமலே ஏழைசெய் குற்றத்தைக்
கனமாக நிலையாமலும்
கருணை செய்யாமலே
(ஏதோ)

2. எத்தனை நாளைக்கு இந்தத் துன்பங்களை
என்னென்று சகிப்பேனையா?
அத்தனே உந்தன் அகமகிழ்ந் திந்த
அருண உதயத்தில்
அருள்செய் யாதேதானே!
(ஏதோ)

3. நீதிமிகுங் குளந்தைநின்ற நாராயணா!
நிச்சயமாகப் பாரினில்
ஆதிமூல மென்றானை கூப்பிட
அடுத்துக் காத்தவனே! —
இப்போதினில்

(ஏதோ)

4. பக்த பராதினா பங்கச லோசனா
பரம தயாளுவே என்னும்
உத்தம மாகவும் உந்தனுட நாமத்தை
ஓதவும் கிருபை வரவிலையோ —
இன்னும்

(ஏதோ)

[அபதாரச்சமை - குற்றம் பொறுத்தல்
கனமாக - பெரிதாக
அருணன் - சூரியன்
ஆதிமூலமென்றானை = ஆதிமூலம் + என்று + ஆனை
பங்கசலோசனா - தாமரைக்கண்ணா]

2

Why the dispute with me?

Tune : Bhupāḷam

(Chorus)

You have cast a dispute unknown
Against me, I don't know what to do!

(Anti Chorus)

Can you plot against me, Māyakkūttā?
Without saving me fairly and removing evils dearly !
(You)

(Cogent)

1. Bowing at your feet I extol you
You have to excuse foibles of mine !
Wink at my faults and
deal them lightly !
(You)

2 I can tolerate these hardships for
how many days?
Lord, shower grace on me
at this dawn !
(You)

3. Narāyaṇā stood on the soil
known for justice
You saved the one who called
you VERY ORIGIN ! - Now
(You)

4. You are the Lord with lotus - eyes !
Render graces to all in world !
I laud you like these; yet
You have not shown me mercy !
(You)

[apatārac camai - pardoning the mistakes
kaṇamāka - largely
aruṇaṇ - sun
ātimulameṉṟāṇai = ātimulam+eṉṟu+āṇai
paṅkaja locanā = possessing lotus - eye]

3

மறக்கமாட்டேன்!

இராகம் : நாதநாமக்கிரியை

(பல்லவி)

இரவும் பகலும் மறவேன்! — எம்பெருமானை
இரவும் பகலும் மறவேன்!

(அனுபல்லவி)

கரங்களைக் கூப்பிக்
கவின்குளந்தா புரியை

(இரவும்)

(சரணம்)

1. கனமாக விளங்கும்
கமலப் பதத்தைத்
தினந்தினம் போற்றிச்
செப்பும்பே ரின்பத்தை

(இரவும்)

2. நட்பொடு உந்தன
நாமத்தை எண்ணிப்
பெட்புடன் இந்தப்
பெரும்பான்மையை நண்ணி

(இரவும்)

3. நேர்த்தியான சங்கீதத்தைத்
தேடிப்பார்த்துக் கவனஞ்செய்து
பத்திமாய் மனங்கூடி

(இரவும்)

4. அரனய னாரும்
அமரரும் நின்னை
வரதமுத என்று
வணங்கிடும் உன்னை

(இரவும்)

5. மங்கையர் நடமிடு
வண்குளந் தைதனைச்
சங்காழி ஏந்திய
செங்கை முகுந்தா!

(இரவும்)

[கவின் - அழகு
செப்பும் - சொல்லும்
நாமம் - பெயர்
நண்ணி - விரும்பு
அரனயன் = அரன் + அயன்;
அரன் - சிவன்
அயன் - பிரம்மா
அமரர் - தேவர்
சங்காழி = சங்கு + ஆழி
ஆழி - சக்கரம்]

3

I will Never forget !

Tune: Nātanāmak Kiriyai

(*Chorus*)

I won't forget day and night
I won't forget - my Great Supreme !

(Anti Chorus)

This beautiful Kuḷantāpūri
With folded hands I will worship !

(I won't)

(Cogent)

1. Great are His lotus - feet !
Daily I worship - this a feast !

(I won't)

2. I ponder your great name
With friendship and elegance !

(I won't)

3. With devotion and oneness
I sing you with choice music !

(I won't)

4. Brahma and siva worship you
Uttering the appellation Varatamuta !
Other gods also adore you !

(I won't)

5. You hold conch and wheel
In your hand - lotus like !
Women come around your shrine !

(I won't)

[kavin - beauty

ceppum - collum

nāmam - name

naṟṟi - like

Aranayan = Aran + Ayan

Aran - Siva

Ayan - Brahma

amarar - god

Cankāḻi - canku + āḻi

āḻi - wheel]

4

சித்தம் இரங்குவாய்

(பல்லவி)

தெரிந்தும் தெரியாமல்
நானேதும் செய்தாலும்—உன்
சித்தம் இரங்கியெனை
இரட்சியும் !
(தெரிந்தும்)

(அனுபல்லவி)

புரிந்து கமலைப்பெண்
மேவும் குளந்தைவாழ்
புயவன்மை மணிவண்ணா!
(தெரிந்தும்)

(சரணம்)

1. சீரான முத்தமிழ் தன்னிலே—உள்ள
தெளிவான கல்விப் பொன்னிலே—நல்ல
ஏரான மால்பதம் அன்னிலே
வேறே ஒருவரைப் பாடேன் பாரினிலே!
(தெரிந்தும்)

2. உலகமுண்ட கனிவாயனே — குழல்
ஊதியே நிரைகாக்கும் நேயனே — மாதரைப்
பலபோற்றிக் கதிரளித்த உபாயனே — உனைக்கண்டு
பணிந்தேன் நலமாகத் தூயனே !
(தெரிந்தும்)

3. சக்கர மேந்திய கையனே — குளத்தைத்
தாமோதர னெனும்சொல் மெய்யனே ! — சேவையை
எக்காலமும் துதித்தேன் துய்யனே !
எழிலாகக் காத்தருள் ஐயனே !
(தெரிந்தும்)

[சித்தம் - மனம்
கமலைப்பெண் - இலக்குமி
புயம் - தோள்
ஏரான - அழகாக
அன்னிலே - இல்லாமல்
நிரை - ஆநிரை
தாமோதரன் = தாம + உதரன் ; கயிற்றால் கட்டுண்டவன்]

4

Have mercy !

(Chorus]

I may commit mistakes - wantonly or otherwise !
But, have mercy on me to shower grace !
(I may)

(Antichorus)

You shine at where Lakshmi dwells !
You strong - shouldered, have mercy !
(I may)

(Cogent]

1. I will never sing others
Except you in three - fold Tamil !
(I may)

2. You sweet-mouthed who put the world in mouth !
Who protect the cattle and women !
I prostrate before you !
(I may)

3. You held the wheel in hand
Dāmotaraṉ is your name in our mind !
I worship you always your pure mind !
(I may)

[cittam - mind
kamalaipeṇ - Lakshmi
puyam - shoulder
ērāna - beautiful
annite - without it
nirai - cattle
Damōtaraṉ = dāma + utaraṉ; one who get tied up on stomach]

5

இதுவே தருணம் !

இராகம் : சவுராஷ்டகம்

(பல்லவி)

அருள்செய்ய இதுசமயம் ! — உன்
அடிமைமீது அன்பாய்!

(அருள்)

(அனுபல்லவி)

மருவளரும் குளந்தைமால்
மாயக் கூத்தா!

(அருள்)

சரணம்

1. வந்தனை செய்துந்தன்
மாமலர்ப் பாதத்தைச்
சிந்தனை செய்யவுஞ்
சிறப்புடன் கடைக்கண்ணால்

(அருள்)

2. மாரிலில் துளப
மாலையன் சுந்தரத்
தாரணிதனிலே வந்து
தயவாக எனக்கு

(அருள்)

3. அந்தரத் திலுள்ள
அமரரும் போற்ற
சேர்ந்தமா அசுரன்
மேல்தான் நடனஞ்செய்தாய்!

(அருள்)

4. பஞ்சவர் தேவியைப்
பாரதந் தன்னிலே
அஞ்சாமல் காத்த
அரிஹரி முகுந்தா!

(அருள்)

5. அன்றுகோ பாலருடன்
ஆநிரை மேய்க்கையில்
கன்றால் விளாவெறிந்து
கனியைக் கொடுத்தவா!

(அருள்)

6. உச்சிதமாய்க் குளந்தை
ஊரினிலே வந்த
அச்சுதா ஹேஹரி
மாமாயக் கூத்தா !

(அருள்)

[துளபமாலை - துளசிமாலை
தாரணி - உலகம்
பஞ்சவர் - பஞ்சபாண்டவர்
கோபாலர் - இடையர்
விளா - விளாமரம்
கன்றால் விளவெறிந்தது - பசுங்கன்று உருவில் வந்த வற்சாசுரன் எனும் அசுரனை, விளாமரத்தின் மீது மோதிக் கண்ணன் கொன்றது.]

5

This is time !

Tune : Saurāstakam

(*Chorus*)

This is time apt
To shower on your slave grace !

(This)

(*Antichorus*)

The great Māyakkuttā
Enshrimed at the fragrant Kuḷantai !

(This)

(Cogent)

1. Bestow graces on me
Who worships thinking your feet !
Corner tip of your eye, behold with !
(This)

2. Manifest before me !
Lord, beutiful with basil nacklace !
(This)

3. Gods in heaven landed
When you danced on a demon !
(This)

4. You exhibited bravery
In saving the wife
Of the great five brothers
Celebrated in epic Mahabharat !
(This)

5. You drubbed the Varccāsura !
Dashing against the tree wood - apple !
While grazing the cattle
Along with the cowherds !
(This)

6. Almighty ! Achiever of wonders !
You have come at the shrine
The great Kuḷantai its name !
(This)

[tuḷapamālai - basil necklace
tārani - world
pañcavar - the five brothers of Pandavās
kōpālar - cowherds
viḷā - wood-apple tree
varccācurā killed - A demon named Varccācurā when came in the disguise of a calf, was killed by dashing against the wood-apple tree by Krishna.]

6

வரமருள்!

இராகம் : தோடி

(பல்லவி)

சக்கரக் கையால் வரமருள்!
தருணம் இதுவே!

(சக்)

(அனுபல்லவி)

மிக்க விருப்பமாங் குளத்தையில்
மேவிய மாமாயக் கூத்தா!

(சக்)

(சரணம்)

1. வான வர்புகழ் தேசுனே!
மலர்ம டந்தைபால் வாசனே!
தானவிசை கேட்டருளுதன் னாசனே!
கதிகொடுக்கின்ற ஞானப்பிர காசனே!

(சக்)

2. அரவமிசை நடம்பு ரிந்தவா!
அனைவோர்க்கு நற்காட்சி தந்தவா!
விரைவுடனே தன்மாமனை வென்றவா!
வித்தைமிகு திருமாதை அணைந்தவா!
(சக்)

3. பஞ்சவருக்கு மிக்க சகாயா!
பக்தனை நட்புடன் காக்கின்ற தூயா!
மஞ்சுலாவு குளந்தாபுரி மாயா!
மகிழ்ந்து வேய்ங்குழல் ஊதிய வாயா!
(சக்)

[அரவம் - பாம்பு
நடம் - நடனம்
திருமாதை - இலக்குமியை
மஞ்சு - மேகம்
வேய்ங்குழல் - மூங்கிற்குழல்]

6

Render boon !

Tune : Tōṭi

(Chorus)

Have mercy to furnish boon
Through your hand wheel - laden !
(Have)

(Anti Chorus)

Lord, enhibiting wonders at
Kuḷantai for people to look at !
(Have)

(Cogent)

1. Gods laud you friendly
Who is residing in *fragrant* lotus!
You enjoy the music of the gods;
Embodiment of knowledge and remover of sins !

(Have)

2. You danced on the *snake* !
Manifesting before all *alike* !
Trounced your uncle *foe* !
Embraced Lakshmi with awe !

(Have)

3 Supporter of the Pāndavās !
You save the devotees with friendship !
You, dweller of the great Kuḷantāpuri ;
And the flautist sounded with the beautiful mouth !

(Have)

[aravam - snake
naṭam - dance
tirumālāi - with Lakshmi
mañcu - cloud
veinkuḻal -reed]

7

எக்குலத்தோர்க்கும் அருள் !

இராகம் : பியாகடை

(பல்லவி)

கருணைநீ செய்குவாய்! — என்கலிதிரக்
கருணைநீ செய்குவாய்!

(கரு)

(அனுபல்லவி)

மருவளரும் குருகை மாநகரில் வாழும்
மாலை வரதனே மனமகிழ்ந் திப்போது!

(கரு)

(சரணம்)

1. வேதத் தமிழ்செய்து
மேதினியில் யார்க்கும்
விந்தையாகவே உபதேசம்
பண்ணியே காக்கும்
போதமிகுங் கவிவாணர்
வினையைத் தீர்க்கும்
புதுமையாய்ப் புகழைத்தரித்து
எக்குலத் தோர்க்கும்!

(கரு)

2. பத்தியுடன் நித்தமுன்
பாதந்தனைப் பணிந்து
பரிவாக மனநல்ல
மார்க்கத்தினில் மிகுந்து
சித்திரமாய்க் கல்வியில்
தெளிவாகவே உகந்து
சிறப்பாகப் பாடவும்
நலமாய்மன மகிழ்ந்து!

(கரு)

3. தேசம்புகழ் குருகைதனில்
வேதங் கோஷிக்க!
திவ்வியமாகக் கின்னரர்
வீணை வாசிக்க!

வாசமிகு மகிழமாலை
பிரகா சிக்க
வனப்புடை அமரர்வருந்தி
நன்றாயா சிக்க!

(கரு)

[கலி - துன்பம்
மேதினி - உலகு
கோஷிக்க - முழங்க
நன்றாயாசிக்க = நன்றாய் + யாசிக்க
குருகை - குருகூர் (ஆழ்வார்திருநகரி)]

7

Graces for all castes !

Tune : Piyākaṭai

(Chorus)

Extend clemency lord !
Removing misery of mine !

(Ex)

(Antichorus)

Show benignity now !
O lord at Kurukaiyur,
Adorned with a fragrant garland !

(Ex)

(Cogent)

1. You remove the sins of bards;
Who preach the world so wonderful
Bringing into Tamil the whole Veda

You are the abode of renown
And protector of all castes !

(Ex)

2. The learned sages extol you !
They laud you with devotion !
Pleasing with them you shower
Mercy on them for ever !

(Ex)

3. Vedas are being chanted at Kurukai !
A place celebrated by the whole nation !
The minstrels play the veena !
The gods beg at your feet !
While your mimusops necklace glittering !

(Ex)

[kali - misery
metini - world
kōsikha - to sing
nanṛāyācikka = nanṛāi + yācikka
Kurukai - Kurukur (Āl̲vartirunakari]

8

கண்கோடி வேண்டும்!

இராகம் : அசாவேரி

(பல்லவி)

கண்ணாயிரம் லட்சம் வேணும் — இக்
கண்ணனைச் சேவிக்க!

(கண்)

(அனுபல்லவி)

பண்ணார்ந்த செந்தமிழ்
பகரும் குளந்தைதனில்
பட்சமொடு மாயனை
உச்சிதமாகக் காணக்

(கண்)

(சரணம்)

1. சோதிமிகுந் திருமுக
மண்டலச் சேர்வையும்
துலங்கக் கவசம்
தரித்த ஏர்வையும்
சாதிமிகு நவரத்
தினமணிப் போர்வையும்
சாறளிகொண் டன்பர்மேல்
தயவாய்க்கண் பார்வையும்

(கண்)

2. ஆனையின் பிடிதவிர்த்த
ஆழிக் கையனை!
அனைவோர்க் குங்காட்சி
கொடுக்கின்ற மெய்யனை!
மானமிலாமல் இடைக்குடி
தன்னில் நெய்யினை
வாரி உண்டகனி
வாயனை துய்யனை!

(கண்)

3. அந்தமிகும் பொழில்சேர்ந்
திலகும் பதியினை
ஆழ்வார் சரஸ்வதி
நிதம்போற்றக் கதியினை

விந்தை யாகவே
கொடுத்தருள் துதியினை
மேவிய மாயனாக
விளங்கு நிதியினை!

(கண்)

[சேவிக்க - கண்டு வணங்க
பண்ணார்ந்த = பண் + ஆர்ந்த;
ஆர்ந்த - நிறைந்த
ஏர்வையும் - அழகையும்
அளி - தயவு]

8

Crores of eyes needed !

Tune : Acāvēri

(Chorus)

To see and worship this Kaṇṇan !
Thousand lakh eyes needed !

(To)

(Antichorus)

Chaste Tamil set to music
Boom at Kuḻantai where Māyan resides !

(To)

(Cogent)

1. To behold your face elegant !
To perceive your armoured chest attractive !
To view your gems-studded mantle !
To look at your eyes merciful;
With which you extend compassion to your adherents !

(To)

2. The lord with chakra-laden hand
Who removed the misery of elephant !
The God who manifests for all !
The spotless who gulped the butter;
In the houses of cowherds without shame !

(To)

3. The place with orchard beautiful !
The Lord by the Ālvār eulogised !
The Supreme achieving wonders !

(To)

[Cēvikka - to worship
paṇṇārnta - paṇ + ārnta;
ārnta - having full
ērvaiyum - beauty also
aḷi - mercy]

9

வாணிக்கு வந்தனம்!

இராகம் : சுருட்டி

(பல்லவி)

வந்தனை செய்தேன் — வாணிதனை
வந்தனை செய்தேன்!

(வந்)

(அனுபல்லவி)

சந்தத நல்ல
சகலகலையு மறியவும்
தாளிணைப் பற்றியே!

(வந்)

(சரணம்)

1. மாதுரிய மாகவே
வாக்கினில் நின்று
வழங்குவாய் தயவாக
ஏதுக்கு மாளாக
எந்தனுக்கு அருளியல்
செய்குவாய் என்று

(வந்)

2. லக்ஷணமுறை நாடி
நீதியாக உந்து
நிமிஷத்தில் கவிபாடி
பட்சமுடனே உந்தன்
பாதார விந்தத்தில்
பக்தியுடனே நிதமென்
மனமும் கூடி

(வந்)

3. கற்றோர்கள் நாவிலுங்
களிப்பாகக் கமலத்தில்
காட்சி கொடுக்கும் தாயே!
இற்றா ரணியில்
எல்லோரும் புகழவே
எந்தன் நாவினில்
இருந்து அருளியே!

(வந்)

[வாணி - சரசுவதி
கமலம் - தாமரை
இற்றாரணி - இத்தாரணி;
தாரணி - உலகு; எதுகை நோக்கி இற்றாரணி என வந்தது]

9

Obeisance to Vani !

Tune : Curuṭṭi

(Chorus)

I submitted obeisance
To the goddess Vāṇi

(I)

(Anti Chorus)

I should possess always
All arts in many ways
Holding your grand feet !

(I)

(Cogent)

1. I invoke you indeed
To help me in word and deed !
Make me fit for all
Giving me grace I long

(I)

2. I worship you daily with all heart !
In Tamil songs composing in a giffy !
In Tamil songs full of morality !
I take recourse at your feet !

(I)

3. Dwelling in a beautiful lotus,
You adore the tongues of prodigies !

I entreat you to make robust
My tongue for the benefit of all !

(I)

[Vaṇi - Saraswati
kamalam - lotus
iṟṟāraṇi - ittāraṇi;
tāraṇi - world;
In accordance with the initial rhyme of the previous line, the usage 'iṟṟāraṇi' has been adopted.]

10

கலவி செய்யலாம் !

இராகம் : பூர்வகல்யாணி

(பல்லவி)

கலவிசெய்ய நல்ல சமயம் சாமி!

(கல)

(அனுபல்லவி)

மலர்மீதில்வண் குளந்தாபுரி
மாமாயக் கூத்தனே!
வளப்பாய் இருபேரும்

(கல)

(சரணம்)

1\. இந்துவும் வந்துதே!
தென்றலும் வீசுதே! — எந்தன்
மெய்யினில் மதனம்பு
விழக் கூசுதே!

(கல)

2. சாகர மொலிக்குதே!
தாகமும் ஆக்குதே!
மோகமுடன் கலந்து
முத்தமிட நோகுதே!

(கல)

3. வாசமிகுங் குளந்தைவளர்
ஆழ்வார் சரஸ்வதி
நேசமுடனே போற்றும்
நிமலா மாயக்கூத்தா!

(கல)

[வண் - வள்ளல் தன்மை
வனப்பாய் - அழகாய்
இந்து - திங்கள்
மதன் - மன்மதன்
சாகரம் - கடல்
நிமலா - தூயா]

10

We can cohabit !

Tune : Purvikalyāni

(Chorus)

This is time Lord !
To have a good copulation !

(This)

(Anti Chorus)

Thou munificent lord of Kuḷantāpuri
And myself on a bed of flower !

(This)

(Cogent)

1 The moon has arisen !
South-wind blows !
Cupid's arrows torture me !
(This)

2. The sea roars !
Love-passion increases !
I am, enkindled by love,
Tempted to kiss nicely !
(This)

3 In the place Kuḷantāpuri so fragrant
Living Ālvār Saraswathi adherent
Extols you spotless, achiever of wonders !
(This)

[vaṇ - munificence
vanappāi - beautifully
intu - moon
matan - cupid
cākaram - sea
nimalā - o pure]

11

சாமி லீலை !

இராகம் : கலியாணி

(பல்லவி)

எத்தனை என்று சொல்லுவேன்?
சாமிசெய் லீலை !
(எத்)

(அனுபல்லவி)

நத்துலவு பழனம்
சூழும் குளந்தைநகர்
நாரணர் என்னையும்
நாள்தோறும் கூடினது !

(எத்)

(சரணம்)

1. மெத்தையின் மீதில் வந்து
பத்து விரலால் பந்து
ஒத்த குத்து முலையைச்
சித்திர மாகப் பிசைந்து
முத்தம் கொடுவென் றிரந்து
வத்தி ரத்தை உகந்து
நித்தில மொக்கு தந்த
முத்துக் கடித்த ணைந்த

(எத்)

2, வக்க ணையுடன் பேசி
நற்கள பத்தைப் பூசி
முக்கிய முளசெண் பகமும்
முயங்கத் தரித்து நெசித்
தெக்கா லமும் கோசித்
துக்களித் தெனை யாசிப்
பக்கலந் திதழுண் டிடக்கை
கொண்டெனைச் சேர்த்த

(எத்)

3. பத்தர்களுக்கு நீதன்
சித்தர்களுக்கு நாதன் !
நத்திரையும் குளந்தை
உத்தமலர்ப் பாதன் !

இத்தலத்தினில் வேதன்
நித்தியம்பணியும் போதன்
சத்தமுழங்க ஆழ்வார்
சரஸ்வதி துதிசெய்த

(எத்)

[லீலை - இன்ப விளையாட்டு
நத்து - சங்கு
பழனம் - வயல்
நித்திலம் - முத்து
களபம் - நறுஞ்சாந்து
கோசித்து - உரையாடி
நாதன் - தலைவன்]

11

Swamy's wanton sports !

Tune : Kaliyāṇi

Chorus

How many I cannot count;
Amorous sports of swamy !

(How)

Anti chorus

In Kuḷantai town surrounded by fields,
Where conches roar
Espoused me my Lord daily !

(How)

Cogent

1. On the bed He came
Caught with his ten digits
The fleshy breasts and massaged !
He begged for a kiss
And espoused to get bliss !

(How)

2. Lord talked in eloquence !
Besmeared over ointment fragrant
Entreated to unite
And consumed the lips !

(How)

3. For adherents He is equitable !
For siddhas He is the Leader
He lives at Kuḻantāpuri
Where conch blows !
He is the one eulogised by
Āḻvār Saraswati, the daily worshipper !

(How)

[lilai - a amorous sports
nattu - conch
paḻanam - field
nittilam - pearl
kalapam - fragrant ointment
kōcittu - speaking
nātan - leader]

12

மாவில் வருவது யாரடி?

இராகம் : பந்துவராளி

பல்லவி

மாவின் மீதேறி வரதாரடி? — குளந்தை
மாயக் கூத்தரோ என்றுபாரடி!

(மா)

அனுபல்லவி

காலித் தடமுமெழு
கடலும் கலங்கப்புவி
களுமீ ரேழுங் குலுங்கக்
காலின் வெண்டையங் கிலுங்க !

(மா)

சரணம்

1. கார்மேக வண்ணன்போலே தோணுதே ! — நல்ல
கமலப் பதத்தில்மையல் பூணுதே !
ஏரான சங்காழியுங் காணுதே — சூரியன்
எழுபரியு மிதற்கு நாணுதே !

(மா)

2. பாரோர்களு மேத்தப்
பரியல்கண் டன்னம்வெட்கித் திருக்குதே
பங்கய மாதுநேயன்
பார்வை போல இருக்குதே !

(மா)

3. உச்சித மாகவே
உலகிலுள் ளோர்க்கே
பச்சைநிறத் துளபம்

இலங்க
இச்சையாய் மாதர்
மனத்தை உருக்குதே — நல்ல
எழிலான சேர்வை மையல் பெருக்குதே !
(மா)

4. கன்னல் வில்லாளிக்குத் தந்தையோ?
கமல மலர்ப்பதத்தை விரும்புது எந்தையோ?
மின்னொளியை ஒக்கும்
மருள்செய் விந்தையாம் !
மன்னர்கள் போற்றிடச் சிந்தையாம் !
கின்னரர் பண்பாட — வேத
கீதங்கள் சோதிக்கக்
கீர்த்தி நிலைநிற்கக்
கீழ்த்திசையோன் போலே !
(மா)

[மா - குதிரை
புவிகளுமீரேழு = புவிகளும் + ஈரேழு
கார் - கருமை
ஏரான - அழகான
சங்காழி = சங்கு + ஆழி
பரியல் - நடத்தல்
துளபம் - துளசி
கன்னல் - கரும்பு
கன்னல்வில்லாளி - மன்மதன்
மருள் - மயக்கம்]

12

Maid, who comes on horse?

Tune : Pantuvarāḷi

Chorus

Who is coming on horse, maid?
Is it the Māyakkūttar of Kuḷantai?
(Who)

Antichorus

The wind, seven seas and the worlds
Tremble as He arrives !
Anklets of His feet also gingle !

(Who)

Cogent

1. Seems to be the figure of Kārmēgavaṇṇā
Towards whose feet my heart goes !
Conch and chakra come in sight !
At this the Sun becomes a hangdog !

(Who)

2. His magestic walk is great !
On this puts head down the swan !
The look is grand
Resembles that of the consort of Lakshmi !

(Who)

3. The garland of basil shines
Around His neck fine !
Melts hearts of ladies behold
Who are full of love passion !

(Who)

4. Is He the father of Manmatā ?
His brightness resembles with lightning !
The minstrels sing the tunes !
Despots eulogise Him !

(Who)

[mā - horse
puvikaḷumīreḻu = puvikaḷum + īreḻu
kār - black

ērāna - beautiful
cankāḻi - canku + āḻi
pariyal - walking
tuḷapam - basil
kannal - sugarcane
maruḷ - confusion]

13

தயவு செய்வாய், மருவ !

இராகம் : பயிரவி

பல்லவி

சாமீநீ தயவு செய்குவாய் !
சரஸஞ் செய்து மருவ !

(சாமீ)

அனுபல்லவி

மாமலர் அணையினில் மகிழ்ந்து
மகிழ்மா மாயக் கூத்தா !

(சாமீ)

சரணம்

1. மாரன் கணைகள் தூவ !
மதியழல் மேலே தாவ !
கோரமாய்க் குயில் கூவக்
கொங்கைகள் விம்மி நீவ !

(சாமீ)

2. பஞ்ச பாணங்கள் தைத்துப்
பாலன்னமும் வெறுத்து
நெஞ்சில் கவலை யுற்று
நினைக்கவு மாசை வைத்து

(சாமீ)

3. ஆழ்வார் சரஸ்வதி
அன்பாகப் போற்றுந் துதி !
நாள்தொறுங் கொண்டபதி !
நாரணா நீரே கதி !

(சாமீ)

[மருவ - தழுவ
மாரன் - மன்மதன்
மதி - திங்கள்
அழல் - வெப்பம்
பஞ்சபாணங்கள் - மன்மதன் கணைகள்]

13

Be merciful to embrace !

Tune : Bayiravi

Chorus

Lord you exhibit mercy !
To dally and embrace !

(Lord)

Antichorus

To enjoy on a grand flower-bed !
O Māyakkūtta, the eternal bliss !

(Lord)

Cogent

1. The arrows of cupid just pour !
The heat of moon drubs !
The koil sings harshly !
The breasts bulge up !

(Lord)

2. Five arrows of cupid hit !
Milk and cooked rice I execrate !
worry eats the heart !
When I think you Lord !

(Lord)

3. This is a greatplace !
Sung daily by Āḻvār Saraswati !
I surrender unto you Nāraṇā !

(Lord)

[maruva - to embrace
Māran - cupid
mati - moon
aḻal - heat
pañca pāṇankaḷ - five arrous of cupid]

14

பக்தருக்குச் சொந்தம்!

இராகம் : சங்கராபரணம்

பல்லவி

சந்தம்! ஹரியின் பக்தருக்குச் சொந்தம் !

அனுபல்லவி

நந்தம் துதிக்கப் பரமா னந்தம்!
கற்றோர்மிகு தாரணிதனில்

(சந்)

சரணம்

1. சகலருக்கு நாதன்
ஞானியருக்குப் போதன்
கமலமொத்த பாதன்
புகழை ஏத்த

(சந்)

2. நீதி மாலின் கீர்த்தியே கியாதி !
நினைத்ததெல்லாம் சாதித் தருளுகின்ற சோதி !

(சந்)

3. காட்டும் பரமபதங் கூட்டும் !
களித்துப் போற்றும்
பாட்டுப் படிக்க மனனாட்டும்
பயங்க ளோட்டும் !

(சந்)

4. நேயன் குளந்தைவளர் மாயன் — பஞ்சவர்ச
காயன் கவிநேர் போற்றும் தூயன் !

(சந்)

[சந்தம் - அழகு
நந்தம் - நாம்
கியாதி - புகழ்
மனனாட்டு = மனம் + நாட்டு]

14

Belongs to the adherents !

Tune : Cankarābaraṇam

Chorus

Beautiful ! Belongs to the devotees !

(Beautiful)

Antichorus

Bliss to worship for us !
In this world full of learned !

(Beautiful)

Cogent

1 Leader to all sects !
Guru to the prodigies !
Having the lotus - feet !
Let us sing Him !

(Beautiful)

2 Renown of His upright is great !
Achiever of our longings, a light !

(Beautiful)

3. Will render salvation !
Will attract to sing !
Will christen the poets !

(Beautiful)

4. Beloved ! residing at Kuḷantai, a wonder !
Graced the Paṇṭavās, a spotless !
Whom the bards adore !

(Beautiful)

[Cantam - beautiful
nantam - we
kiyāti - renown
mannāṭṭu = manam + nāṭṭu]

15

எப்போ வருவான்?

இராகம் : செஞ்சுருட்டி

பல்லவி

எப்போ வருவானோ? அன்பரைக் காக்க !
(எப்)

அனுபல்லவி

எப்போ தடைவனோ?
இனிய நட்புடன்
குளந்தாபுரி இன்பத்தை
இப்புவி புகழவே
குளந்தை தனிலே !
(எப்)

சரணம்

1. மெய்ப்பொரு ளாகி
வேதங்க ளோர்ந்து
கைப்பொரு ளாக்கிநற்
கவிகளு மோர்ந்து
(எப்)

2. சிற்றின்பந் தன்னிலே
தியங்கு மனத்தைப்
பற்றிப் பிடித்துப்
பலமாகத் தேற்ற !
(எப்)

3. கீதங்கள் நாதங்கள்
கேட்டு முவந்து
சாதகம் பண்ணித்
தானுந் துதிக்கவே !
(எப்)

4. மாட்சியுடன் குளந்தை
மாநகரம் மீதில்தனைக்
காட்சி கொடுத்துக்
கருணைசெய் பேரின்பம் !
(எப்)

[புவி - உலகம்
வேதங்களோர்ந்து = வேதங்கள் + ஓர்ந்து
ஓர்ந்து - ஆய்ந்து
இயங்கும் - செல்லும்
சாதகம் - பயிற்சி]

15

When will He come ?

Tune : Cencuruṭṭi

Chorus

When will He visit, I don't know!
To save His adherents !
(When)

Antichorus

When will I get the bliss
Of Kuḷantapuri with friendship?
At Kuḷantāpuri, with the world laudation !
(When)

Cogent

1. To give knowledge to grasp Eternity
To attain Vedic essence
To possess riches of the world
To delve into the poetic beauty !
(When)

2. To swim ashore from evanescent life !
To uplift catching my hand !
(When)

3. Hearing the eulogies full of music,
Making me perfect with due practice
In my musical songs praising Him !
(When)

4. To manifest at Kuḷantai
Showering grace and bliss for all !
(When)

[puvi - world
vētankalōrntu = vētankaḷ + ōrntu
ōrntu - deep study
tiyankum - cellum
cātakam - practice]

16

வரம் தருவாரா?

இராகம் : சுருட்டி

பல்லவி

தாராம லிருப்பாரோ? — நல்வரம்
தருவாரோ? அறியேன் !
(தா)

அனுபல்லவி

ஓராறு சாஸ்திரம்
உகந்து வேதங்கள்
பாராயணம் செய்யப்
பண்பாய்க் குளந்தையான்தாள் !
(தா)

சரணம்

1. வாரணங் காத்தான்!
மலைதனை எடுத்த
ஆரணப் பொருளாம்!
அன்புடன் அவனியில்!
(தா)

2. தொண்டர்க்குத் தொண்டன்
தூயர்க்கு நேயன்
அண்டர்க்குத் தேவன்
ஆழியின் கையான்

3. பஞ்சவர் தூதன்
பாரினில் வேதன்!
வஞ்சியை மணஞ்செய்யும்
மால்மாயக் கூத்தன்!

[பாராயணம் - வேதம் ஓதுதல்
வாரணம் - யானை
ஆரணம் - வேதம்
அண்டர் - தேவர்
வஞ்சி - பெண்; இங்கே இராதை]

16

Will He give boon?

Tune : Curuṭṭi

(Chorus)

Will He remain without giving?
Will He render good boon?
It is not to me clear!
(Will)

Antichorus

Doing the recitation with love
Of Vedas and Sāstrās;
At the feet of Kuḷantaiyān

(Will)

Cogent

1. Saved He the pachyderm !
Lifted He the mountain !
Essence is He of the Vedas !
Love is He in this world !

(Will)

2. Minister is He to the adherents !
Lover is He to the pure !
Lord is He to the gods !
Wheel - laden is His hand !

(Will)

3. Envoy to the Pandavās !
Great - God to the world !
Achiever of wonders
Marrying the lady Rādhā !

(Will)

[pārāyaṇam - reciting Vedas
vāranam - elephant
āranam - veda
aṇṭar - gods
vañci - lady; here Rādha]

17

வளைவுக்குக் காட்சி !

இராகம் : கலியாணி

பல்லவி

கண்ணா ! வளைவோர்க்குக் காட்சிநல்கும் வண்ணா !

(கண்)

அனுபல்லவி

தண்ணருள் துன்னும்
இன்னகர்க் கண்ணா !

(கண்)

சரணம்

1. மண்ணும் விண்ணும் ஒன்றாக
வளர்ந்திடும் வாமன் !
இன்குழல் வாயன்
ஆகிய கண்ணா !

(கண்)

2. வேத கீதங்கள்
வேண்டி உரைத்திடும்
விந்தை ஊர்ந்தபரஞ்
சோதி ஆகிய !

(கண்)

3. தந்தை தாயினும்
அன்புடையாய் என்று
வந்து பணிந்த
அண்ணல் குளந்தையில் !

(கண்)

[வளைவோர் - பணிவோர்
துன்னும் - நிறையும்
தேன் - இனிமை
அண்ணல் - மேன்மையோன்]

17

Manifestation for surrendering !

Tune : Kaliyāṇi

(Chorus)

Kaṇṇā, Manifesting for prostrators !
(Kaṇ)

(Antichorus)

Dwelling at a town nice
Showering on devotees grace!
(Kaṇ)

(Cogent)

1. Appeared as Vāmaṇ
Touching the sky and earth so long !
Sounded the flute so dulcet
(Kaṇ)

2. Devotees recite Vedas and songs
With love worshipping You !
Such a wondrous Light are You !
(Kaṇ)

3. Adherents bow down to you !
As their parents you are loving !
You are the Superior at Kuḷantai !
(Kaṇ)

[vaḷaivōr - those who surrender
tunnum - filling full
aṇṇal - superior]

18

சோரநாபூரைக் காணலாம்!

இராகம் : செஞ்சுருட்டி

பல்லவி

ஸ்ரீசோரநாபூரைக் கண்டு தரிசித்திடலாம் வாரீர்!
(ஸ்ரீ)

அனுபல்லவி

பரிவுடன் அவர்பாதம் - நல்ல
பரம பதத்தை அளிக்கும்!
(ஸ்ரீ)

சரணம்

1. மாத ராசையைத் துறந்து
மதியிலி ஞானத்தைத் திறந்து
கீதநாதப் பிரசங்கம் பண்ணி
கீர்த்தியாய்நற் பதங்க ளடைய
(ஸ்ரீ)

2. வீதி தன்னிலே வந்து
விந்தை யாகவும் புகழ்ந்து
நீதியாகத் தியானஞ் செய்து
நின்றுமனதை யவர்மேல் வைத்து!
(ஸ்ரீ)

3. சரணமென் றவர்களைக் காக்கும்
தரணிமீதில் பயத்தை நீக்கும்

வருவோரைப் போற்றும்
வளர்கு ளந்தையில் வாசனை
பக்தர்களுக்கு அருளும் நேசனை !

(ஸ்ரீ)

[நேசனை - அன்பனை]

18

Let us behold Coranapur !

Tune : Ceñcurutti

Chorus

Let us worship Cōranāpur beholding !

(Let)

Antichorus

His feet so merciful
Will furnish salvation well !

(Let)

Cogent

1. Spurning the tendency lascivious
Execrating the knowledge incorrect
Waxing eloquent in eulogising Him
To attain salvation !

(Let)

2. Standing on the street humbly
Eulogising Him wondering at !
Medidating Him adopting rules
Fixing mind on Him !

(Let)

3. Will save who come at Him!
Will remove fears in mundane life!
Will nourish the devotees
Such is He who dwells at Kuḷantai!
Who pours graces on adherents!

(Let)

[nēcanai - who graces]

19

இதுவோ குளந்தைப் பதி!

இராகம் : பியாகு

பல்லவி

இதுவோ குளந்தைப் பதி!
இகபரம் அளிக்கின்ற

(இது)

சரணம்

1. மதியேது மில்லாத
வன்னெஞ்சனுக் கன்பாய்த்
துதிசேர் நல்லார்
துலங்கவே நினைக்கின்ற

(இது)

2. மூவாசை தன்னிலே
மூழ்கிய எனக்கின்று
பாவாசை தனில்மனம்
பற்றச் செய்வித்தது

(இது)

3. வந்த வினைதீரப்
பணிமால் பதமென்றும்
சிந்தை மயக்கம்
தீர்க்குமெனச் செப்புகின்றது
(இது)

[பதி - தலம்
துலங்க - விளங்க
பாவாசை = பா + ஆசை
பா - பாட்டு
மூவாசை - மண், பெண், பொன் மீது ஆசை]

19

Is this that shrine Kulantai !

Tune : Piyāku

Chorus

Is this the Kuḷantai shrine
That gives salvation now and after !
(Is)

Cogent

1. Extending love to me unrelenting dunce
Uplifting the righteous
(Is)

2. Creating interest towards poetry
Peeling from me the three desires
(Is)

3. Giving salvation to the accrued sins
Removing the fluster of mind
(Is)

[pati - shrine
tulanka - to prosper
pāvācai = pā + vācai
pa - poetry
mūvācai - three desires - land, lady and gold]

20

ஏழையைப் பார் !

இராகம் : பியாகு

பதம்

1. மார்கழித் திருலக்ஷ்மியின்
திருநாள் . . . கண்டுதொழும்
மானிட னாகிய ஏழையைக் காத்து
வளமையை அருளு மய்யா !
கானகத்தில் இலங்கு ஆறுபோல் வாடிக்
கலங்கும் ஏழையைப் பாரய்யா !

2. காமங்கள் வந்து எனைத்தொ டாமல்
கருணையும் செய்யு மய்யா !
அலறி அலறி நாவும் உலருது
அலைந்த காலும் நோகுது
அடிகளைப் பற்றி உற்றார்க்கு முண்டோ?
அகிலமீ தடிய னுக்கு !

வேறு

3. அந்திபகலு மூவாசையி லுழன்று
அலப்புதே என்தன் மனம் !
ஆரணமுனிவர் பொருளை ஆராய்ந்து
அஞ்சலி செய்ய அருளய்யா !

தோத்திரப் பிரியனே துய்யனே
மெய்யனே சோதியாம் ஆதியே !
துணையடி நம்பினேன் துன்பங்கள் நீக்கித்
துலங்கு நல்வர மளிப்பாய் !
கஞ்சனுந் தேவருங் கைதொழு தேத்தும்
கவின்குளந் தாபுரியில்
கண்ணா உன்னைக் காண்டல் நின்று
களிப்புடன் பதம் பாடி !
அந்தண னாகிய ஆழ்வார் சரஸ்வதி
அன்புடன் போற்றுவதை !

[இலங்கு ஆறு - செல்லும் ஆறு
துய்யனே - தூயவனே
கஞ்சன் - கம்சன்]

20

Behold the Poor !

Tune : Piyāku

Patam

1. In Markaḻi I worship Thee !
To such a devotee, extend grace !
Shower on me prosperity !
I wither and embroil
In this world like a river in forest

2. Save me furnishing grace
Since I wallow in evanescent life !
My tongue is parched
Owing to my wailing !

Feet ache due to meandering !
Nothing evil will befall your devotee !

(Different)

3. I wallow in three desires day and night !
Pour grace to worship prodigies !
And Vedas and their philosophies !
You are the Origin, Pure, Lover of eulogy !
And you are the Truth and Light !
I submit unto you, please lift up !
Kaṇṇā, I worship Thee happily at Kuḷantāpuri
You are the one whom Kañcan and gods worshipped !
Receive this adherent's patam
Adherent, Āḻvār Saraswati my name !

[ilanku āru - flowing river
tuyyanē - o pure !
Kañcan - Kamcan]

21

நடித்ததைப் பாரும் !

தண்டகம்

பல்லவி

நடித்ததைப் பாருமய்யா !

சரணம்

1. நடித்ததை என்ன சொல்வேன் ?
நாரதர் பாட — நன்றாகத்
தாளங்கள் போட !

படித்த செந்தமிழ் சொல்லிய
பாவலர் நாட — செஞ்சடை
டமருக மாட !

(நடி)

2. தையென் றொருகால்
தானுமே தூக்கி — தஞ்சமென் றவர்
பயங்கள் நீக்கி !
வையக மீதினில்
வல்லவ னாக்கி — மானிடர்க்கு
மாட்சியைப் பெருக்கி !

(நடி)

3. பூதல மீதில் போற்றியே நல்ல
பொற்புறு குளந்தா புரிதனில் மெல்ல
காதலாக அடியவர் பணிந்துமே செல்ல
ஆழ்வார் சரஸ்வதி துதித்துமே சொல்ல !

(நடி)

[டவருகம் - உடுக்கு
தையென்று - தை : ஒலிக்குறிப்பு
பூதலம் - உலகு
பொற்பு - மேன்மை]

21

See His having acted

Tantakam'

Chorus

See His having acted !

(See)

Cogent

1. How can I recount !
His having acted !
While Nāratā sang and beat the lute
While the Tamil sages accosted
And His small drum played !
(See)

2. Lifting one leg with elegance !
Removing fear from those sought refuge !
Making his adherents strong
And showering greatness on them !
(See)

3. At Kuḷantāpuri, the devotees
Bowing and landing Him
When Āḻvār Saraswati uttered
Inclining his shoulders in front of Him !
(See)

[ṭamarukam - a small drum tapering in the middle
taiyenru - tai : hint of sound
putalam - world
porpu - grandeur]

22

மாபலிக்கு வரங்கொடுத்தாய் !

இராகம் : செங்கலா

பல்லவி

திருவழு தீசா !
திருக்குளந்தையில் மேவிய பாசா !

சரணம்

1. பரிவதை விண்டேன்
பத்தியைக் கண்டேன்
பண்புடன் கொண்டேன்
பாலமு துண்டேன் !
உருக்கமு மிகவடைந்தேன்
மதியைப் பெருக்கி !
நானுரு வடைந்தேன் !
கருணா கரனை மிகவாழ்த்திக்
கவிகள் அனந்தம் உறவேத்தி — இங்கு
காதலை அவன்பாலே — வைத்து
நிதங்களிக்குநற் பாவாலே !
பெரும்புக ழாகக் கொண்டாடி
பேசுவன் ஆனந்த மிகநாடி
உரிமை ஆகிய பதந்தேடி
உற்றது சொல்வேன் பூதங்களைப் பாடி !
(திரு)

2. சிந்தையில் மகிழ்ந்தே
வந்துனைப் புகழ்ந்தே
சிற்றின்பம் இகழ்ந்தே
முத்தியை உகந்தேனான் !
வந்தனை மிகச்செய்தேன்
மனதினால் வடிவுடன் மலர்கொய்தேன்
சுந்தர மான திருவடிக்கே — சொல்லுவேன் சாத்தி
என்மனப் படிக்கே ! — இன்று
தொண்டுக்கே ஆளானேன் !
துதிக்கிலர் வேலானேன் !
விந்தை யாகவே துதி கொண்டு
விளங்கு மலர்ப்பதத் தானா யண்டு

வந்தவினை தீர வழிகண்டு —
பண்களைப் பாடின பண்புகள் விண்டு !
(திரு)

3. காலனை மிதித்துப் — பாலனை மதித்துக்
காலத்தைச் சதித்துக்
கற்பகத்தைச் சிதைத்துமே
தாலநீ ருள்ளளவும் —
தான்சிரஞ் சீவியென எவ்ளளவும்
சந்தேகம் இல்லாமல் — தான்பெரி
யோர்கள் எல்லாம் !
சகலதும் தானறிந்து —
அவனுக்குத் தண்ணருளும் ஈய்ந்து
ஞானமதனில் வரங்கொடுத்தாய் — நல்
ஆழ்வார் சரஸ்வதிக்கு அருள் — கொடுத்தாய் !
கோலமிகும் குளந்தையை அடுத்தாய்
குல்லையம் புகழ்நல் அடிஎடுத்தாய் !
(திரு)

[திரு - இலக்குமி
சதித்து - வென்று
குல்லை - துளசி
சிரஞ்சீவி - நீண்ட ஆயுள் பெற்றவர்; இங்கு மாபலிச் சக்கரவர்த்தி
ஈசா - கடவுளே !
தாலம் - பூமி]

22

Rendered boon to Mabali !

Tune : Cenkala

Chorus

O God of Panṭiyā !
Kind - hearted at Tirukkuḻantai !

Cogent

1. I uttered as it *struck* me!
Beheld the true faith!
Consumed the boiled rice with!
Melted with the increase of knowledge
Developed into a complete person!
Eulogised Him with songs
Showering love on *Him*!
I will speak at length about Him
All the time touching His fame!
(O)

2. Felt joy in your remembrance!
Execrated evanescent life!
Coveted the salvation!
Worshipped You much!
I submitted my praise *unto* your feet!
Today I became your *servant*!
I despise those who *do* not worship You!
I point out the *greatness* of tunes
Sung on you for salvation!

3. You rendered boon to him
To live for ever!
You extended graces *to* Āḻvār Saraswati
Lived at Kuḷantai, *an elegant* place!
You, obtained fragrance *from* basil!
(O)

[tiru - Lakshmi
catittu - won
kullai - basil

Ciraňcīvi - one who blessed with a long life;
here Māpali, the great emperor.
tiruvalutīcā = tiruvaluti + īcā
Valuti - Pandian
īcā - O God !
tālam - the earth]

23

சித்தம் தெளிய மருந்து !

இராகம் : செங்கலா

பல்லவி

சித்தந் தெளிய மருந்தொன் றிருக்கு
தேடு வேதாகமத் துள்ளே !

(சித்)

அனுபல்லவி

பத்தி அறிவைச் செலுத்தியும்
பரமானந்த மோகத்தைக் கொடுக்குமிந்த

(சித்)

சரணம்

1. மெய்யென்றும் பொய்யென்றும் எண்ணாமலே —
இந்த மேதினியில் உலவி
விரகாக் கினிபால் உடல்வேக வீணிலே !
மெய்மதி தாழச் சால — விஞ்சையாம்
மோகத்தால் வேதமந்திரம் விட்டு
வேசையர் இதழ்களை விரும்பி —
முனிவர்கள் மேலுமேலு மிந்த
வேதாந்தங்கள் விரித்துப் பார்த்து

(சித்)

2. மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையும்
விட்டு மதியை நிலைநிறுத்தி
வாழ்பஞ்ச பூதங்கள் பேதகம் பண்ணாமல்
வளமை யாகவும் நிறுத்தி
மதன குரோதம் செய்யாமல் ஐம்புலன்கள்தன்
வலிமை யாகத் தான்நிறுத்தி
மாயைவிட்டு வளரும் போதமுள மாமுனி
செய்திடு சாத்திரங்கள் ஓர்ந்து
(சித்)

3. காயமென்று மிந்த லுத்தைச் சடத்தைக்
கருத்தில் நினையாமல்
கனமான சரியை கிரியை யோகஞானம்
கண்டு தெளியாமல்
கருத்துமூன்று திரியும் காசினி யோரைக்
கணம ணுகாமல்
களித்து நல்ல பதத்தைத் தேடிக்
கண்டுபிடித்துக் கருத்தைச்செலுத்தி !
(சித்)

[சித்தம் - புத்தி
காசினி - உலகம்
ஓர்ந்து - ஆய்ந்து
பேதகம் - வேறுபாடு]

23

Remedy to mend the mind !

Tune : Cenkalā

Chorus

There is medicine to mend your mind
Search in Vēdāgamā !
(There)

Antichorus

Which will develop piety
As well as salvation !

(There)

Cogent

1. We don't execrate the bad
We are consumed by the flame of lust !
We are prey to the lips of whores !
But to prevent all these
Our sages had delved deep into

(There)

2. To despise land, lady and gold
To fix our mind calmly
To shun the evanescence
To swerve from illusion
The observance of Sāstrās uttered
By the prodigies is a must !

(There)

3. Think not this dirty frame as eternal
Think on Sariyai, Kiriyai, Yoga and Gnana
Have not the relationship of the confounded
Search for the feet of the Lord

(There)

[Cittam - mind
Kācini - world
ōrntu - analysing
bētakam - difference]

24

வேறு கதியில்லை !

இராகம் : செங்கலா

பல்லவி

சீதர மனோகரா ஸ்ரீதரா கிருபாகரா !

(சீத)

அனுபல்லவி

வேதவுரை நாதனே
விண்ணவர் தீபனே
விந்தையாய் உனை நாடி வந்தேன் !
வேறே கதியிலை காத்தருளு சொன்னேன் !

(சீத)

சரணம்

1. சம்சார சாகரந் தன்னி லுழன்று
தயங்கு மனத்தைத் தானுந் திருத்தித்
தமியேன் மீதில் அன்பு வைத்தித்
தருணத்தில் அருள் செய்யும்
கமலை சேரும் புயாவுனைக் கண்டேன்
கவலைகளும் விண்டேன் இன்று !
அமரர்கள் முனிவோர் தாள்போற்றும்
அடிகளைப் பணிந்தேன் அடியனைக்காரும் !

(சீத)

2. வேலைசூழ் புவிதன்னின் மீதே
விஞ்சையாய் மோகங் கொண்டு நிதமும்
காலையும் மாலையும் ஆசையில் உழன்று
கலங்குகிறேன் தயவில்லையா ?

ஆலிலை மேல்துயிலும் அனந்த சயனா !
வாயர்க்கு நேயா !
தால மதனில் வேதங்கள் போற்றும்
சரணினைப் பணிந்தேன் தாரும் பரமபதம் !
(சீத)

3. சென்ம மெடுத்தது எத்தனை யோஉன்
திருவுளத் துக்கும் தெரிந்திருக்குது !
கன்ம பாசம் எனைத்தொ டாமல்
கருணை செய்தருளும்
துன்னுநற் பொருளே அருள்துலங்கும்
குளந்தை தனில்வாசா !
நன்லய மாக ஆழ்வார் சரஸ்வதி
நவிலும் கவிதனைக் கேட்டருள் விமலா !
(சீத)

[சாகரம் - கடல்
கமலை - இலக்குமி
வேலை - கடல்
வாயர் - வாய்மை உள்ளோர்
தாலம் - பூமி]

24

No other recourse !

Tune ; Cenkala

Chorus

Lakshmi-adorned and abode of graces !
(Lakshmi)

Antichorus

You are the Head as per the Vedas
You are the Head of the gods
I came unto you, in a quaint manner !
You have to protect me who has no recourse !
(Lakshmi)

Cogent

1. I who am wallowing in the sea of life
My mind which is fumbling always
You mended all these bestowing love on me!
I beheld you, Lakshmi-adorned !
I uttered my sorrows today !
I submitted me unto your feet
Which are worshipped by all gods !
(Lakshmi)

2. I embroil in this mundane life
Don't you have mercy on me ?
You reposing on the leaf of banyan tree
I seek refuge unto you
Render salvation !
(Lakshmi)

3. I have taken innumerable rebirths
You know all these things !
Please protect me from sins following me !
You the dweller of Ku<u>l</u>antai
Listen to the voice of Ā<u>l</u>vār Saraswati
(Lakshmi)

[cākaram - sea
Kamalai - Lakshmi
vēlai - sea
vāyar - righteous
tālam - the earth]

25

இவனால் அறைக்குள் புகமுடியாது !

இராகம் : செங்கலா

பல்லவி

பால னாக்கும் அம்மா - இவன்கோ
பால னாக்கும் அம்மா !

(பால)

சரணம்

1. சேலையைத் திருடித் தெருப்பிள்ளை மீதே
சீக்கிரத்தில் ஒளித்து எதிரில்நில் லாதே
காலஞ் செய்து வந்தானென்று சொல்லாதே !
தான்குடித் துறங்குறான் பாருயிப் போதே !

(பால)

2. உறியினில் தயிர்பால் உண்டல் அறிவனோ
உத்தண்டம் பேசுறாய் உண்டவன் எவனோ ?
அறிவேன்என்று உரைக்க லாமோ? சின்னவனோ ?
அறைக்குள் புகுவானோ ? அதட்டி உரைப்பவனோ ?

(பால)

3. அய்யமில் லாமலே முன்னின்று பேசி
ஆலிங்கனஞ் செய்து அதட்டினை ஏசி
மெய்யுடல் சோர்ந்து பார்த்தனை கூசி
வெட்கிவந் துரைத்தே நகுகிறாய் தோசி !
(பால)

4. நந்த குமாரன் ராசகோ பாலன்
நாரணன் அன்பர்க்குள் குணசீலன் !
(பால)

[உத்தண்டம் - வீரம்
ஆலிங்கனம் செய்து - கட்டிப் பிடித்து]

25

He can't enter into a room !

Tune : Cenkalā

Chorus

Lad He is dear maid
Gopālan He is !
(Lad)

Cogent

1. Don't say my beloved maid
That He thieved the sarees of girls
And concealed them amidst kids !
Just see now He is sleeping
After consuming to his heart's desire !
(Lad)

2 Does He know eating curd and milk
From the pot kept in 'uri'
You are telling bravely but who ate them?
Is He such a small being?
Can He enter into a room?
Can He talk aloud?
(Lad)

3. You talked nicely standing before Him!
You embraced Him to your heart's desire!
You became fatigue in this!
Telling these you simple smile, abashed!
(Lad)

4. He is the son of Nandā
He is the Lord of cowherds
He is the supreme
He is the best among our lovers!
(Lad)

[uttaṇṭam - valour
ālinkanam ceitu - embracing
uri - pots kept one over another in a hoop suspended by strings from the roof.]

26

தர்மம், அதர்மம் இரண்டுக்கும் நீயே காரணம்!

இராகம்: புன்னாகவராளி அல்லது ஸ்ரீராகம்

பல்லவி

கருணை இறங்க வேணும் — குளந்தைமாலே
கருணை இறங்க வேணும்!
(கரு)

அனுபல்லவி

தருணமிது சொன்னேன்
தானரு வேலைதனில்
தஞ்சம தல்லால்
தாரகம் வேறுண்டோ?

(கரு)

சரணம்

1. காட்டில் இளங்கன்று போலும்
கருத்து முழன்றும் கலுழும் ஏழையின் பாலே !
நாட்டிலென் மருங்கில் வந்து
நலமாகக் காத்தருள் நாரணனே ! —
பரிபூரணனே உந்தன்

(கரு)

2. பாரினில் ஏழைகள்
சொல்லுநூல் பலகேட்டுப்
பட்ச மாய்அருள் செய்யுந்
தாரணி மாலேஉன்
தாளிணையைப் பணிந்தேன்
தயங்காமல் தானருள் செய்து

(கரு)

3. தரும மதர்மம் இரண்டுக்கும்
காரணமான தாயக நீரல்லோ !
பெருமையைக் குளங்கையில் பிதற்றும்
அடியருக்குப் பேரின்பமே ! — உதவும்
பீதாம்பர தாரிஉன்

(கரு)

[தாரகம் - ஆதரவு
கலுழும் - கவலையுறும்

மருங்கில் - அருகில்
தாரணி = தார் + அணி
தார் - மாலை]

26

You are the source of equity and wickedness !

Tune : Punnākavarāḷi or Srīrākam

Chorus

Bestow graces, Lord of kuḷantai
Bestow graces !

(Bes)

Antichorus

This is ripe time
You are a sea of grace
Except your feet
Where is a better recourse ?

(Bes)

Cogent

1. Bewildered and withered
Like a calf in forest
I suffer, come near so please !
Protect me furnishing all prosperity !

(Bes)

2. You are showering graces
On those who sing you through books
I submit myself unto your feet
Bestow graces without hesitation !

(Bes)

3. You are responsible
For the justice and unjustice !
You are the Bliss for earnest followers
Who sing you at Kuḷantai
You, the wearer of gold-cloth !

(Bes)

[tārakam - support
kaluḻum - worrying
marunkil - near
tāraṇi = tār+aṇi
tār - garland]

27

கோரணி கொள்ளுகிறான் !

இராகம் : காம்போதி

பல்லவி

பாரு மம்மா கோபி மாரே - கிருஷ்ணனை நீங்கள்
பாலன் பாலன் என்கி றீரே !

(பாரு)

அனுபல்லவி

பாருமம்மா நானிருந்து பால்க றக்கையில்
இளம்கிடாரி அவிழ்த்து விட்டுக்
கோரணி கோரணி கொள்ளுறான் ஈதோ

(பாரு)

சரணம்

1. பாச்சி தோச்சி என்னும் குழந்தை — மச்சில்படி
போச்சுதோ காணீ தென்ன விந்தை? — உறியில்
மெல்ல மெல்லப் பூனை போலே — இரண்டு
கையைச் சாய்த்து வாயண் ணாந்து — மடை
பாய்ச்சு றாப்போல் காங்ஷையாய்த் தானோடி வந்து
(பாரு)

2. திட்டி னாலும் இல்லை ரோசம் — அடித்தால்பிடி
கிட்டு வதும்மேல் பிரை யாசம் ! — பசுக்களுடன்
நட்ட நடுவில் சேர்ந்து — அதன்
குட்டிகள் போலே தவழ்ந்து !
முட்டி முட்டிப் பால்கு டிக்கும் !
கட்டு மட்டாய் என்ன சொல்வேன் ?
(பாரு)

3. மண்களை அளைந்து தின்கிறான் ! —
சொல்லுறோமென்றால்
கிண்கிணியைத் தாரேன் என்கிறான் — அரிதான
தங்கமோ என்கிறான் ! — துரத்தினால்
கொங்கைமேல் அணைத்து நானு முத்தம் —
கொடுக்க அவனிதழ்
ஓங்குற சொகுசைச் செத்தே !
(பாரு)

4. பிள்ளை பல்லைப்பிதுக்கி அழவச்ச மாயவன்
கள்ள நெடுந்தனிக் கோலம் அம்மம்மா ! — இவனைக்
கிள்ளுறான் சொல்லாதே என்று விள்ளுறான் ! —
முலையை முத்தம்
கொள்ளுறான் நத்தை போன்று துள்ளுறான் ! —
ஓடுறான் ஈதோ !
(பாரு)

[கோபிமார் - ஆய்க்குலப் பெண்கள்
காங்ஷை - விருப்பம்
கோரணி - கேலி செய்தல்
பூசை - பூனை]

27

Mocking with gestures !

Tune : Kāmboti

Chorus

Just see Him, ladies of herdsman-caste !
You say a lad He is !
(Just)

Antichorus

When I milk a milch-cow
He lets loose an young heifer !
Mocks with gestures at me !
(Just)

Cogent

1. How does He climb up steps ?
If He is a prattling lad, as you say !
He approaches the uri furtively
Soundless like a cat !
Drinks the milk or curd so much
With eagar with the Speed
Like water through a released flood-gate !
(Just)

2. For rebuke, no response !
For holding, no easy catch !
Sucks milk like a calf
Directly from the udder, what to say !
(Just)

3. Eats the mud taking with hands
If chided, refuses to give
The girdle with tinkling bells !
If closed, just climbs upon me
Embraces the breasts, listen to me !
He protrudes His lips for a kiss !
(Just)

4. He makes other kids to weep !
He pinches other boys
If another watches, ask him not to reveal !
He kisses our breasts
Jumps in the form of a snail !
(Just)

(Gopimār - young women of herdsman-caste
kānsai - eager
kōraṇi - mocking at with gestures)
pūcai - cat)

28

என்ன பிள்ளை பெற்றாயடி?

இராகம் : காம்போதி

பல்லவி

இப்படி யானால் எப்படி யசோதாய் — நீதான்
என்ன பிள்ளை பெற்றாயடி பேதாய் !
(இப்படி)

அனுபல்லவி

செப்படி வித்தைபோ லல்லோ இருக்குது ! —
மாயக்கிருஷ்ணன் செய்ததைச்
சொல்லையில் மனம்திடுக்கிடுதே அடிக்கடிதான் !
(இப்படி)

சரணம்

1. மாச்சலடி யம்மா ஒருநாள் செல்வது — ஒருயுக
மாச்சம் மாவிது உன்மக னாலே — பலசரச
ஆச்சியரை வீட்டு மச்சில் — மச்சதிர
வச்சு நானும் பொச்செரிந்தேன் — வந்தான்
சீயம் போலே வந்து
பூச்சி காட்டிக் கொண்டு உரிக்கி றாண்டி — சுத்தப்
பேச்சினான் பயந்து ஓடி னேண்டி — உடன்கை
வாச்சு தென்று ஒருமிக்க
வச்சி ருந்த வீர ரெல்லாம்
காச்சு விட்டான் தாக்கி விட்டானே அக்கக்கா !
(இப்படி)

2. சாட்டை யில்லாப் பம்பரம்
ஆட்டி வைப்பது போலத் தொழில்
காட்டுறான் இதென்ன மாயம் !
கொட்டு வாயோன் மகன் — சம்பிரதாயத் தொழு
மாட்டை எல்லாம் அவுத்தடித் தானே ! — அதில்
கூட்ட மீட்டு அங்கங்கே போனேன் — விரும்பா
விட்டால் வரும்தன் சுகமாய்
மோட்டில் உறிகட்டி — அதில்
மோட்டிலே ஊர்ந்தி ருந்தே
வெள்ளைத் தயிரெல்லாம் சும்மா
முட்டி விட்டான் வயணமாய்
மோடு பண்ணிக் கொண்டானம்மா !
(இப்படி)

3. திடுதி டென்று வந்து — எங்கும்
தடையில் லாமல் சென்று — மெல்லத்
தடவுறான் ! குச்சிலுள்ளே நுழைந்து நானும்
குடுகுடுத்துப் போய்ம றிச்சு
நடையிலே நிற்கையில் இன்னும்
பொடுபொடுத்துந் துள்ளுறான் — நெய்யை
அளைந்து உண்டு
திடுமென்று துப்பிவிட்டான் என்முகத்தில் — கண்ணைத்
தொடுமுன் தப்பிவிட்டான் — செகத்தில் இவனைப்
பச்சமால் என்பதும் மானுடர் என்பதும் சத்தியமோ?
இடுப்பிலே மின்னுற கத்தி
உண்மையெனச் செப்புறார் நித்தியம் !
(இப்படி)

[மாச்சல் - சாவு
பொச்செரிந்தேன் - பொறாமை உற்றேன்
சீயம் - சிங்கம்
பூச்சி காட்டுதல் - பயம் காட்டுதல்
மோடு - மடத்தனம்
அளைந்து - கிளறி]

28

What child you have given birth ?

Tune : Kāmbōti

Chorus

What shall we do if He does so ?
What child gave birth you ?
(Wh

Antichorus

Jugglery it is like !
What tricky Krishnan did about !
(What)

Cogent

1. Dying it is to spend a day
Yug it is like passing a day
Young ladies of herdsman - caste
Were on the upsairs, I envied
Krishnan came on the scene
He threatened me with mimicry
I ran hither and thither
He chased away the valorous men
Who came to my rescue !
(What)

2. Like a top spinning without thread
He exhibits wonders many and many !
He let loose the cattle from the shed
Simply replied "they will come" when asked!
He made the pots of curd so white
To slip down from the uri !
He is naughty and haughty !
(What)

3. He frisks and sneaks into
All places without reluctance !
If we put obstacle
He simply jerks and jumps !
He stirred ghee and put into his mouth

Suddenly did spit on my face !
Is it true the statement
That He is an incarnation as well as God !
He boasts of his dagger on his waist
As a true one !

(What)

[māccal - dying
poccerintēn - felt jealous
cīyam - lion
mōṭu - silly
aḷaintu - stirring]

29

மந்தைக்குப் போவோம் !

இராகம் : தேவகாந்தாரம் (?)

(பல்லவி)

மந்தைக்குப் போவம் வாவா ! — கிருஷ்ணா
சோதை வருந்தாத்தாய் அல்லவா?

(மந்)

(அனுபல்லவி)

விந்தைக்கு இதுவல்லோ குளிர்ந்த நேரம் ?
வெயிலானால் வாடுமே சரீரம் !

(மந்)

(சரணம்)

1. வருகு வீரப்பா பலவுள
ஆநிரை சாதி !

வஞ்சக மல்லாய் இதோகேள் !
இதுமூச்சு திருகை முருகையது
சிக்கி எத்துல் முதுபதுக்களை சேர்த்து !

(மந்)

2. அமுத ரசத்தை வாங்கி
வாங்கிக் கடகாலில் தாக்கும்
சின்னக் கோபாலருட தோளிலே
தூக்கின முன் அதரத்தில் வைத்து
உண்ணலா மவர்க்கினிய வாச்சுது
முரண்டைத் தூர நீக்கு !

(மந்)

3. வேனல் கண்டால் இடுகங்காகும்
கிடையாது புல்லு
வீணே போக்கினது போதும்
மேய்க்கச் சொல்லு
நானிதோ போகிறேன்
வராவிட்டால் நில்லு
நடக்கவோ அல்லால் வீணே
தொழுவிலே செல்லு

(மந்)

4. வடமால் வடிவாகி
அவதரித் தாயே
மானுடர்நின் வருணனை சொல்ல
மானுடர்தம் அன்பே !
இடையருக்கு நல்ல
நீது சொல்லாயே !
இன்றைக் கிப்படிக் கோலம்
எடுத்தாயும் நீயே !

(மந்)

[சரணம் ஒன்றில், மூச்சு முதல் பதுக்களை வரை
வந்துள்ளவை, மாடுகளின் சாதிப்பெயர்கள்;
அமுதரசம் - பால்
கடகால் - பாற்பாண்டம்
அதரம் - உதடு
நீது - நீதி]

29

Let us go to the herd !

Tune : Tāvakāntāram (?)

Chorus

Let us go to the herd, come on Krishna !
Cōtai is not at all a punitive mother !
(Let)

Antichorus

Is it not ripe time for wonders ?
Body will wither in the scorching of the sun!
(Let)

Cogent

1. Varieties of cattle are many !
Let me list out please listen !
Muccu, tirukai, murukai
CiKi, ettul, mutu, patukhaḷai - all
(Let)

2. Young cowherds fill up the milk
In buckets repeatedly

You can drink to your desire
In which their desire will be fulfilled
Spurn your recalcitrant mind !

(Let)

3. If it is not, you will not get grass !
Stop the time passing so wasteful
I have started to go there
If you don't come, you stay here !

(Let)

4. You are the incarnation of Tirumāl
People are describing you at length !
You are the beloved of the mass
Show good path to the cōwherds
Today, you have exhibited this form !

(Let)

[In cogent no. 1, the nouns from mūccu to Patukhaḷai denote various varieties of cows.
amutaracam - milk
kaṭakāl - bucket
ataram - lip
nītu - nīti(moral)]

30

பாலனல்லன் !

(பல்லவி)

பால னல்லடி பேதாய் — கிருஷ்ணன் இந்திர
ஜால னல்லவோ சோதா !

(பால)

(அனுபல்லவி)

காலனுக்குக் காலன் !
கலியாண குணசீலன்
ஞாலருக்கு அனுகூலன்
நவநீதக் கோபாலன் !

(பால)

(சரணம்)

1. தாரணியை அளப்பான்
சமுத்திரத்தை அடைப்பான்
நீரில்சய னிப்பான்
நெருப்பிலும் இருப்பான் !
சோரவேஷம் தரிப்பான்
கொண்ட கைப்பிடி
மோரில் வெண்ணை எடுப்பான் !
முலை உண்டுதான் நடப்பான் !

(பால)

2. தேகத்தையும் மறைத்தான்
சிறுவனைப்போ லுதித்தான்
நாகத்தில் நடித்தான்
நஞ்சில் முங்கிக் களித்தான் !
கோகுலத்தை வளைத்தான்
கோபியரைப் பழித்தான்
மேகத்தையும் தடுத்தான்
மெய்யோ பொய்யோ கெலித்தான் !

(பால)

3. சிங்கத்துக் குண்டோ பங்கம்?
திகட்டாது உன்பிரலா பங்கள்

பெண்கள் கோருமாத் தங்கம்
என்றுமுய்ய எங்கள் அங்கம்
செங்கைக்கு உகந்தாய் சங்கம்
சீயம் பகிர்ந்தார் அங்கம்
உங்கள் குலத்துத் தங்கம்
உக்கிரம் ஸ்ரீநர சிங்கம் !

(பால)

4. முந்தைக் கடல் கடைந்தான்
முன்னவருக் கமுதம் தந்தான்
அந்தரத்திலே இருந்தான்
அவதாரமாய்ப் பிறந்தான் !
இந்தமண் புகழ்ந்தான்
இடையர்குலம் சமைந்தான் !
மந்தைக் கேகத் துணிந்தான்
வாய்த்த மாயன் இவன்தான் !

(பால)

[காலன் - எமன்
தாரணி - உலகம்
சீயம் - சிங்கம்
முன்னவர் - தேவர்]

30

He is not just a lad !

Chorus

Not a lad just He is
He is a doer of wonders like Indra !
(Not)

Antichorus

He is Yama to Yama!
Embodiment of virtues!
Bestower of benefits to mankind!
Gōpālan, the avaricious of butter!
(Not)

Cogent

1. Measure the world He will
Stop the ocean as well!
Sleep on the waves of sea
Can dwell even in fire
Assume many forms a He can
Churn out butter from a handful of curd - milk;
Who killed Butanai by sucking her breasts!
(Not)

2. Concealed His outer body!
Exhibited on land as a lad!
Danced on the hood of snake!
Reveled submerging in poison!
Attracted the Gokulam entirely
Mocked at the womanfolk of herdsman-caste!
Stopped the moving clouds
True or false, He won in all!

3. Is there is any defeat for lion?
Your achievement never cloy to listen!
You are the glittering gold woman like!

You are the boon for our salvation !
You have a conch suitable to your
red head!
You as Narasimha tore the body !
He is your caste's noble soul !
Terrible was Narasinkam !

(Not)

4. Churned the ancient sea
Distributed the ambrosia to gods
Dwelled in the sky unsupported
Born as an incarnation !
Caused to get glory for the earth
Adorned the caste of Iṭaiyās !
Decided to go to herd
Definitely He is the wonder of wonders !

(Not)

[Kālan - Yamā
tāraṇi - world
ciyam - lion
munnavar - gods]

31

எங்கே இருக்கிறாய் ?

பல்லவி

எங்கேதான் இருக்கிறாயோ ? கிருஷ்ணா ! —
யசோதைக்கு
ஏதும் தெரியவில்லையே !

(எங்கே)

அனுபல்லவி

சங்கையே இனி துன்பம் தானய்யா !
சொல்லும் சும்மா
அங்கேவந் தென்னுடன்
ஆவல்தீர் சேவிக்க !

(எங்கே)

சரணம்

1. ஜலத்திலோ? அல்லது நிலத்திலோ ? — பாடும்
தரத்திலோ ? சொல்லொரு
மரத்திலோ ? இங்கிருமாந்திரு
தலத்திலோ ? பின்ஒரு குலத்திலோ ? — மாதவர்
தவத்திலோ? ஜபத்திலோ ?
பலத்தகரக் கம்சனுயிர் குடித்த தாரகையை
நிலந்திருந்தச் சசிகுலப்
பிரபாவம் தினமும்
வழுந்து அன்பர் உளத்திலோ ? — சொல்லுமிப்போ
அங்கே உந்தன்
பொன்னடி சேவிக்க !

(எங்கே)

2. கல்லிலோ? கனக வில்லிலோ? — சூழ்ந்த
காற்றிலோ? பத்தர மாற்றிலோ ? — அன்பர்கள்
இல்லிலோ ? தழைந்த புல்லிலோ ? எழுந்த
இருளிலோ ? பொருளிலோ ? — மல்லெடுத்த
வல்லரக்கன் தன்கிளை மாற்ற வந்த
சூத்திர தாரியர்களைப்
புல்லு வாணர்கள் சொல்லிலோ ? — சொல்லும்
இப்போ அங்கேகிப் — போந்த
பொன்னடி சேவிக்க !

(எங்கே)

3. மலரிலோ ? சொல்லொரு தளிரிலோ? — மலரின்
மணத்திலோ ? — சத்தியநற்
குணத்திலோ ?
துலங்கும் நிலவிலோ? நிலவின் ஒளியிலோ ? — எனது
நினைவிலோ ? கனவிலோ?
கவினான புவியில் எனையும்
கண்காட்சி கண்டே
விளையாடப் போதுமென்று
நினையும் தென்வடைசை நகரிலோ ? — ஒரு நிமிஷம்
தேடிஉன் கனகமலர்ப்
பாதம் சேவிக்க !

(எங்கே)

[சங்கை - ஐயம்
சசி - திங்கள்
கனகவில் - பொன்வில்]

31

Where are you?

Chorus

Where are You? Krishna
Yasōtā can't find out You!

(Where)

Antichorus

Unclear is a distress, dear!
Please confess now!
So that I can worship You
To my heart's desire!

(Where)

Cogent

1. In water ? in land ?
In the song ? or in tree ?
In prayer ? or in penance ?
Or in the hearts of adherents
Who laud you for achievements
Like the killing of Kamsā ?
Tell the place I will come and worship !
(Where)

2. In stone ? In golden bow ?
In wind ? or in houses of devotees ?
In darknees ? or in articles ?
Or in the words of poets
Who sing the glory of gods who slay the demons !
Tall me the spot, I will come and worship !
(Where)

3. In flower ? In sprouts ?
In the fragrance of flowers ?
In moon ? or in brightness ?
In reality ? or in dream ?
Or in the place Tenvaṭacai
Where I have been attracted
To roam and place ?
Tell me the place, I will come and worship !
(Where)

[cankai - doubt
caci - moon
kanakavil - golden bow]

32

கோவிந்தன் சரித்திரம் !

இராகம் : சங்கராபரணம்

தாளம் : ஆதி

நந்தன் சரித்திரத்திற்குப்
பதில்
கோவிந்தன் சரித்திரம்

நந்த குமாரன்பதஞ் சந்தம்
பத்தருக்குச் சொந்தம்
துதிக்கப்பரமா னந்தம் !
— மகத்தோ மிகும் !

(நந்த)

நீதன் சகலருக்கும் போதன்
ஞானியருக்கு நாதன்
கமலமொத்த பாதன் !
— புகழை ஒத்த

(நந்த)

நீதிமால் கீர்த்தியே கியாதி
நினைத்ததெல்லாம் சாதித்
தருளுகின்ற சோதி
— தரணிதனில்

(நந்த)

காட்டும் பரமபதம் கூட்டும்
கவியால் சொல்லும் பாட்டும்
படிக்க மனம் நாட்டும்
— பண்பு மிகுந்த

(நந்த)

நேயன் குளந்தைவளர் மாயன்
பஞ்சவர்ச காயன்
கவிஞோர் போற்றும் தூயன் !
— கமலை சேரும்

(நந்த)

32

Sketch of Govinda

Tune : Cenkarāparaṇam

Rhythm : Āti

Recounting Govinda on the line of the Sketch of Nanta !

The feet of the son of Nantā
Are elegant and adorable !
They belong to the devotees !
It is a bliss to worship them !

(The feet)

He is just and advisor to people !
Leader of the sages
Having the lotus-feet !

(The feet)

Only this supreme's fame is manifesting !
He is the Light and He could achieve
Whatever He conceives !

(The feet)

He will show the way to salvation!
Songs in praise of Him
Will fetch undiminishing bliss!
(The feet)

He is beloved to all!
Who is dwelling at **Kulantai**
Who is the mentor for the Pāṇṭavās!
Whom the poets of world celebrate!
(The feet)

33

குறும்புக் கோபாலன்!

இராகம் : செஞ்சுருட்டி

தாளம் : ஆதி

பல்லவி

அப்பன் வருவானோ ? — அடிமைமீ தன்பாய்
அப்பன் வருவானோ
(அப்பன்)

அநுபல்லவி

முப்பழமும் பாலும் நெய்யும் உவந்து
உண்ணும் குளந்தை
(அப்பன்)

சரணம்

1. ஆற்றங் கரைதனிலே ஆய்ச்சிய ருடன்கூடி
குறும்புகள் செய்யும்
கோபால னாகிய
(அப்பன்)

2. அண்டர்க ளுடன்கூடித் திண்டுகள் பேசியும்
செண்டு முலைக்கோபியர்
சேலை எடுத்தொளிக்கும்

(அப்பன்)

3. காசினி ஏழுமுண்ட கனிவாயன் மணிவண்ணன்
வாசம் புகழ் குளந்தை
மாநல மாயக் கூத்தனென

(அப்பன்)

[அண்டர் - தேவர்
திண்டு - வம்பு
காசினி - உலகம்]

33

Impish Gopalan !

Tune : Ceñcurutti

Rhythm : Āti

Chorus

Will the venerable come !
Having shown love towards this slave !

(Will)

Antichorus

The dweller at Kuḷantai
Who tastes the three-fruits, milk and ghee !

(Will)

Cogent

1. On the bank of the river
Along with the maids of herdsman caste
Doing all sorts of mischiefs
Person called Gōpalan

(Will)

2. In the company of gods
Talking ribaldry and taunting ;
Hiding the sarees of the bosomy girls

(Will)

3. He swallowed the seven worlds
He the dweller at Kulantai
Achieving wonder of wonders !

(Will)

[aṇṭar - dēvas
tiṇṭu - ribaldry
kācini - world]

34

தொண்டர்க்கு நேயர்!

இராகம் : சுருட்டி

தாளம் : ஆதி

பல்லவி

தாராம விருப்பாரோ? — வரம் தருவாரோ?

(தாரா)

அனுபல்லவி

பாராயணம் செய்யுமன்பர் குளந்தையின்மால்
(தாரா)

சரணம்

1. வாரணம் அடுத்தார் மலைதனை எடுத்தார்
ஆரணத் துட்பொரு ளானவர் இன்றைக்கு
(தாரா)

2. தொண்டர்க்கு நேயர்! தூயகுல வாயர்!
அண்டர்க்குத் தோழர்! ஆழியின் கையர்!
(தாரா)

3. பஞ்சவர் தூதர்! பாரினில் வேதர்!
வஞ்சியை மணஞ்செய்யு மால்மாயக் கூத்தர்!
(தாரா)

[வாரணம் - யானை
ஆரணம் - வேதம்
ஆழி - சக்கரம்]

34

Beloved of votaries!

Tune : Curuṭṭi

Rhythm : Āti

Chorus

Will He remain ungraceful?
Or will He give graces?

(Will)

Antichorus

To the enthusiasts who recite songs
At his feet at Kuḷantai !

(will)

Cogent

1. He who helped the elephant
He who lifted the mountain
He who himself is the meaning of Vedās !

(Will)

2. He is the beloved of adherents
He is the just born of pure line !
He is the comrade to the gods !
He is the holder of wheel !

(Will)

3. He is the master mind to Pāṇṭavās !
He is the vedas Himself
He is the Māyakkutta who wedded the elegant lady !

(Will)

[vāraṇam - elephant
āraṇam - veda
āḻi - wheel]

35

செந்தாமரைப் பதம் !

இராகம் : யமுனா கல்யாணி
தாளம் : ஆதி

பல்லவி

செந்தா மரைப்பதம் நம்பரந்தா ! — திருக்குளந்தை
உகந்த முகுந்தா !

(செந்)

அனுபல்லவி

வந்தார் அருள் தந்தார் — என்றைக்கும்
நந்தார் மாயன் வந்தார் !

(செந்)

சரணம்

1. கந்த மலர்ப்பொழில்
சூழ்ந்து கமழ்தரும்
விந்தையாம் புரியில்
மேவிய ஸ்ரீதரர் !

(செந்)

2. பூனைபோல நடந்து
புகுந்துஅரை நொடியினில்
ஆனையை உண்டிடும்
அசுரர்குலத் திலகர் !

(செந்)

3. உலகொரு மூன்றையும்
ஓரடி அளந்த
நலமுறு முண்டக
நாண்மலர்க் கையர் !

(செந்)

4. தந்தை தாயினும்
அன்புடை யாய்அன்றி
வந்து பணிந்தவர்க்கு
வரப்பிர சாதருஞ் !

(செந்)

[நந்தார் - குறையார்
கந்தமலர் - மணமிகுமலர்
முண்டகம் - தாமரை]

35

The lotus - feet

Tune : Yamuna kalyāṇi
Rhythm : Āti

Chorus

Give us the lotus - feet
O ! Mukuntā who adored the Kuḷantai !
(Give)

Antichorus

Came He and showered graces !
He who never diminish !
(Give)

Cogent

1. Sritarā has enshrined at a place
Where the flower gardens with fragrance
Engulf all around !
(Give)

2. Subdued He the asurās
With his prowess
With which He smashes an elephant in a jiffy !
(Give)

3 He measured the three worlds
Just in His single step !
His hands are as attractive as lotus !
(Give)

4. Loving more than father and mother !
Also You give boons
To those who come at Your feet !
(Give)

[nantār - undiminishing
kantamalar - flower full of fragrance
muṇṭakam - lotus]

36

சோரநாபூர் !

இராகம் : செஞ்சுருட்டி
தாளம் : ரூபகம்

பல்லவி

ஸ்ரீசோரநா பூரரைக் கண்டு
தரிசித் திடலாம் வாரீர் !
(ஸ்ரீ)

அனுபல்லவி

பரிவுடன் அவர்பாதம்
பரமபதத்தை அளிக்குமிந்த !
(ஸ்ரீ)

சரணம்

1. மாத ராசையைத் துறந்து
மதியை ஞானத்தில் திறந்து
கீதநாதப் பிரசங்கம் பண்ணிக்
கீர்த்தி யான பதங்களடைய
(ஸ்ரீ)

2. வீதி தனிலே வந்து
விந்தை யாகவும் புகழ்ந்து
நீதியாகத் தியானம் செய்து
நின்று மனதிற்பக்தி கூர்ந்து !

(ஸ்ரீ)

3. சரணமென் றவர்களைக் காக்கும்
தரணிமீதில் பயத்தை நீக்கும்
வருணன் போற்றும்வண் குளந்தையில்
வாசனைக் கமலாவதி நேசனை !

(ஸ்ரீ)

(கமலாவதி - இலக்குமி)

36

Coranapur !

Tune : Ceñcurutti
Rhythm : Rupakam

Chorus

Come on to perceive and worship
The GOD of Srīcōranāpūr !

(Come)

Anti chorus

With kind heart His feet
Will render salvātion !

(Come)

Cogent

1. Forgoing the lust for women
Enkindling the knowledge in mind
Eloquently describing musically
His feet to attain sinless life !

(Come)

2. Coming along the streets
Lauding Him quite wonderfully
Worshipping Him with piety
(Come)

3. Will protect those who unto His feet!
Will remove fears from life!
Lord who resides at Kulantai
which is full of prosperity
And who is the consort of Kamalāvathy!
(Come)

[Kamalāvathy - Lakshmi]

37

இது தென்குளந்தைத் தலம்!

இராகம் : பியாகு
தாளம் : ஆதி

பல்லவி

இது தென்குளந்தைத் தலம்! — இமையவர்
போற்றிடும்
இது தென்குளந்தைத் தலம்!
(இது)

அனுபல்லவி

மதிநுகரும் கருங்குவளை
மாலையணி ஆடும்
பதும முகத்தன்
பக்தரைக் காக்கின்ற!

(இது)

சரணம்

1, மாதர் மோகத்தில்
மயங்கிய அன்பர்க்கு
நீதி லாதமொழி
செப்புதற் கருளிய !
(இது)

2. ஐம்புல மீதே
அறிவைத் துறந்து
அம்புவியில் பந்த
அடியவர்க் கருள்புரியும் !
(இது)

3. கமலா வதியுமென்று
களிகூர்ந்து மணஞ்செய்த
விமலமால் மாயக்கூத்தன்
மேவி உலாவும் !
(இது)

[இமையவர் - தேவர்
குல்லை - துளசி]

37

This is shrine tenkulantai !

Tune : Piyāku
Rhythm : Āti

Chorus

Tenkuḷantai shrine is this
Which is by the gods celebrated !
(Ten)

Antichorus

His face in lotus - like !
Dancing the garland of basil in his chest !
Who is protecting his votaries !
(Ten)

Cogent

1. Redeems those who are lascivious
Teaches them to utter just words !
(Ten)

2. Losing mind in five senses
Suffering from mundane bondage
Will find solace only in Him !
(Ten)

3. Māyakkutta will roam about
The great shrine Kuḷantai,
Whom the Kamalāvathy, with happiness
Married that day !
(Ten)

[imaiyavar - dēvas
kullai - basil]

38

கவி ஆடினார் !

இராகம் : உசேனி
தாளம் : ரூபகம்

பல்லவி

கண்டுகொண் டாடினார் !
இருகை தனைப்பொத்திக் களித்துக் குதித்துக்
(கண்டு)

அனுபல்லவி

வண்டு பண்பாடும் குளந்தை வாசனை !
பரிசுத்தக் கோமளக் கையாரும் !
(கண்டு)

சரணம்

1. வாடைப் பொடிபரி மளங்கள் பூசி
மலர்களை ணிந்து சையடப் பேசி
மேடை யிளமதி வரக்கண்டுடல் கூசி
வீரத் தன்மையொடு காமனை ஏசி !
(கண்டு)

2. நேர்த்தி யான நல் வாடை உடுத்து
நிகரில் லாதபே ரின்பத்தை அடுத்து
சேர்த்தி யாகப்பண் ணாசை எடுத்து
திவ்ய மானரா கங்களைப் பிடித்து !
(கண்டு)

3. வாழ்வு மிகுகுளந் தாபுரி சேர்ந்து
மகிமை யாருநற் பதங்களை ஓர்ந்து
ஆழ்வார் சரஸ்வதி போற்றவும் தேர்ந்து
அருள்கொடுக் குமாயனை அன்புடன் சார்ந்து !
(கண்டு)

38

The poet danced !

Tune : Uceni
Rhythm : Rupakam

Chorus

Beholding Him he danced
Joining hand, jumping in ecstasy !
(Beholding)

Antichorus

The dweller at Kuḷantai
Where sing the beetles !
Him worships with elegant hands !
(Beholding)

Cogent

1 Adorning body with fragrants !
Decorating further with flowers !
Seeing the moon with the body tickling
But reproaching cubid with valour !
(Beholding)

2 Donning the neat raiments
Getting the unsurpassing bliss
Amusing with the dulcet music
Joining the venerable hands !
(Beholding)

3. Living at the prosperous Kuḷantāpuri
Thinking His glorious feet
Worshipping the graceful Māyan
A̲ḻvār Saraswathy lauding selectively !
(Beholding)

39

மனத்துயர் நீக்கு !

இராகம் : பியாகு
தாளம் : ஆதி

கீர்த்தனை

1. திருவடித் தியானத் திருநாள்
தரிசனம் செய்தடியேன்

திவ்ய மானசொல் தேடிஎடுத்துச்
செப்புதற் கருள்புரிவாய் !

2. மார்கழி மாதத்தில் பக்தருக் கருள்செய்யும்
மகிமை மிகும்சேவை !
மனங்குளிரக் கண்ணால் கண்டென்
மனத்துயர் நீங்கிடவே !

3. தோத்திரப் பிரியனே மாதவர்க் கருள்செய்யும்
தூமறையின் பொருளே !
துணையடி நம்பினேன் கண்ணால் பார்த்துத்
துலங்குநல் வரமளிப்பாய் !

4. அரனயன் முதலோர் தொழுதற் கரிய
அநந்த இரட்சகனே !
அனுதின முந்தன் மலரடி போற்றும்
அன்பருக் கருள்புரிவாய் !

5. நஞ்சமு தாக்கி ஆநிரைக் குதவிய
நாளின் மலர்க்கண்ணா !
நாயினும் கடையேன் நின்னடி பணிந்தேன்
நயந்தருள் புரிகுவையே !

6. காளிங்கன் மீதில் நடனம் புரியும்
கார்முகில் மேனியனே !
கானகத் தில்இளங் கன்று வாடும்
கவிஞனின் சரனென்றேன் !

7. "ஆதிமூல மெ"ன்ற ஆனைக் கருளிய
அற்புதமாம் வடிவே !
அவனி மீதுநான் பாவி யாகிலும்
அடியிணை களையடைந்தேன் !

8. காரு லாவும் பொழில்சூழ் குளந்தாபுரிக்
கண்ணா ! உன்பதத்தைக்
கனம்பெற என்று சரண மடைந்தேன்
கவலைகள் தீரமொழிந்தேன் !

9. நிறைசெந்நெல் விளையும் கழனிசூழ் குளந்தை
நிமல நின்பதத்தை
நெடுநா ளாய்த்துதித் தேற்றும் கவிஞனின்
நினைவறிந் தருள்புரிவாய் !

10. சீரு லாவும் குளந்தாபுரி வாசா
திருமகள் உறைமார்பா !
திவ்ய நாமத்தை என்றைக்கும் போற்றிடச்
சிந்தை மகிழ்ந்தருள்வாய் !

[அரனயன் = அரன் + அயன்;
அரன் - சிவன்
அயன் - பிரம்மா
நஞ்சமுது = நஞ்சு + அமுது; இரண்டாவதன் தொகை
புரிகுவையே - குச்சாரியை பெற்றது.
கார் - மேகம்]

39

Peel off the distress of mind !

Tune : Piyāku
Rhythm : Āti

Kirttanai

1. Bestow on me graces
To worship chanting you
At Your glorious feet
So that I could glean
Choice words to laud you !

2. Extend me Your vision
To submit me unto you
In the month of Mārkaḻi
So that I can get my difficulties rid of!

3. You, lover of eulogy
Bestower of boons to sages
Essence of Vēdās very pure
I believe in Your pure feet
Render me boon to uplift me!

